ஸ்ரீமதி சரோஜினி தேவி.

இப்பெண்மணி நிஜாம் இராஜ்ஜியத்தைச் சார்ந்தவர். சிறு வயதிலேயே தேச பாஷையிலும் ஆங்கிலக் கல்வியிலும் புலமையடைந்தவர். ஆங்கில மொழியில் ஒப்பாரு மிக்காருமில்லா புலமை வாய்ந்தவர், இந்தியப் பெண்மணிகளுள் இவர் ஒருவரே! தேனினுமினிய சொல் வளப்பமாகவும் யாற்றொழுக்காகவும் செய்யுள் யாத்தலில் சிறந்தவர். மேல் நாட்டுக் கவிகளான மில்டன், மெக்காலே முதலிய விஞ்ஞானிகளையொத்த இயற்கை அறிவு செறிந்தவர். மேல்நாட்டினரால் மாட்சிமைப் படுத்தப் பெற்றவர். பிற மொழியில் இத்துணை ஏற்றமுற்றிருப்பினும் தேசபாஷாப் புலமையிலும் முன்னேற்றத்திலும் வன்மையுற்றவர். பிரசங்கங்கள், வியாசங்கள், பத்திரிகைகள் வாயிலாக தேசபாஷையின் பொருட்டு மிக முயன்றுழைப்பவர். இவரை (பெண்மணி)ப் போல் நம் தமிழ் மொழியைக் கருதி உழைப்பவர் உளரா? இவரைப் (பெண்மணி)போல் தமிழ் மொழியைத் தழைக்கச்செய்ய தமிழ்மக்கள் முற்படுவார்களா ?

கலா சிந்தாமணி

“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ” —திருக்குறள்.

புத்தகம் ௬ 6 | ரௌத்திரி ௵ தை ௴ ஜனவரி ௴ 1921 | பகுதி ௪ 4

திருமுருகாற்றுப்படை

[௨—திருச்சீரலைவாய்]

வைந் நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படும் மணி இரட்டும் மருங்கின் கடு நடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால் கிளர்ந்து அன்ன வேழம் மேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண் மிகு திரு மணி
மின் உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப
நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலம் குழை
சேண் விளங்கு இயற்கை வாண் மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவு இல் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள் நிறமுகனே
மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம் உற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே, ஒருமுகம்

குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே, ஆங்கு அம்
மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பில்
செம் பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர் விடுபு
வண் புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர் தோள்
விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை;
உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை,
அங்குசம் கடாவ ஒருகை ; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப ; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய ; ஒருகை
கீழ் வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடு இன் படு மணி இரட்ட ; ஒருகை
நீள் நிற விசும்பின் மலி துளி பொழிய; ஒருகை
வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட ; ஆங்கு அப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால் வளை ஞரல
உரம் தலைக் கொண்ட உரும் இடி முரசமொடு
பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ
விசும்பு ஆறாக விரை செலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே. அதா அன்று.

புலவரேறுன நக்கீரர் திருமுருகக் கடவுளின் திருவருள் பெறுவான் வந்த ஓர் இரவலற்கு திருச்சீரலைவாய் எனும் திருப்பதியில் அமர்ந்தருளும் அறுமா முகப் பெருமான் திருவருட் பெருமையைப் புகழ்ந்து கூறுமிடத்து அக்கடவுள் அடியவர்கட்கு அருள்புரிய எழுந்தருளும் யானையின் இயல்பைக் கூறுகிறுர் :—

யானையின் இயல்பு.

முருகப் பெருமான் திருவருள் புரிய எழுந்தருளிவரும் வேழமானது தன்னை யடக்கி ஆளும் பாகனுல் மிக்க கூர்மையான தோட்டி எனும் ஆயுதத்தால் தன் மத்தகத்தே குத்தப்பட்டதால் உண்டாய ஆழமான ஓர் வடுவுடையதும் ; தன்னுதலினிடத்து என்றும் வாடா மாலையாய பொன்னுல் ஆக்கப்பட்ட அழகிய அரிமாலை எனப் பெயரிய ஓர் மாலையானது அரிய சித்திரத்தோடே விளங்கும் பொன் பட்டத்தின்மேல் அசைந்து ஆடவும், தன் வரவினை விளக்க அணியப்படும் மிக்க ஒளி பொருந்திய பெரிய மணிகள் தன் இருமருங்கிலும் தாழ்ந்து தொங்கப்பட்டு அசையுந்தோறும் மாறிமாறி மிக்க ஒலியைச் செய்து கண்டார் அச்சங்கொளும்படி நடக்கும் நடையினை உடையதும் ; கூற்றுவனை ஒத்ததும்; எவராலும் தடுத்தற்கு அரிய வலியினை உடையதும், தான் வேகமாக ஓடுங்கால் புயல் காற்றெழுந்தால் ஒத்து வேகத்தோடே ஓடும் இயல்பினையுடையதுமான வேழத்தின் முதுகில் ஆறுமுகக் கடவுள் எழுந்தருளி வரும் குணமுடையவர்.

முருகக்கடவுள் அணியும் திருமுடிகள்
(கிரீடங்கள்)

தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம், என் ஐந்து வேறு வேறு வகையினவாய வடிவினை உடைய அம் முடிகட்குச் செய்யவேண்டிய தொழில் வண்மைகள் எல்லாம் நிறைந்து முற்றுப் பெற்ற அவ்வைந்து உருவினையுடைய திருமுடிகளிலும் நடுநாயகமாகவும், ஒன் றற்கொன்று உருவிலும் ஒளியிலும் மாறுபாடுகொண்டு மிருந்த அழகிய ஒளியை உடைய மணிகளும் ஞாயிற் றின் கதிரேயனைய ஒளியைக் கக்கவல்ல தீயும், மின்னலுந் தன்னொளியில் பின் னடையும் வண்ணம் அவ்வளவு நிறைந்த பேரொளியோடே அழகுசெயப் பொரு ந்தி விளங்கும் திருமுடிகள் (கிரீடங்கள்) ஆறினையும் அழகியதன் ஆறு சென்னி களிலும் பொருந்த அணிவர் ஆறுமுகக் கடவுள்.

அவர் அணியும் காதணிகள்.

நிறைந்த ஒளியானது என்றும் நீங் காது தங்கியதால் ஏககாலத்துப் பே ரொளியை பத்து திக்குகளிலும் வீசும் உயர்ந்த இரத்னக் கற்களைத் தொழிற் கூறு முற்றுப்பெற அழகாக அமைத்து மாற்றால் உயர்ந்த பொன்னால் ஆக்கப் பட்டு தம் திருக்காதுகளில் அணியும் மகரக் குழையானது இருள் நிறைந்த ஆகாயத்தில் முதிர்ந்த பேரொளியுட னே இயல்பாக விளங்குகின்ற முழுமதி யைச் சூழ்ந்து என்றும் நீங்காமல் உரோகிணி முதலதாகிய காந்தியைக் கக்கவல்ல மீன்களை விளங்குவனபோல் முழுமதியை ஒத்த முருகக்கடவுளின் திருமுக மண்டலங்களைச் சூழ்ந்து தம் காதுகளில் அணியும் மகரகுண்டலங்கள் வெகுதூரம் ஒளியைத் தரவல்லனவாய் விளங்கும்.

ஆறு திருமுகங்களின் இயற்கைத் தோற்றம்.

நமக்குமாராய எனும் ஆறெழுத்தமை ந்த ஒரு திருமந்திரத்தை தாம் மறக்கி னும் நாமறவாமல் உச்சரித்தலையும் வரு த்தமில்லாத விரதங்களையுடைய தவத் தொழிலையும் செய்யவேண்டிய காலத் தே செய்து முடிப்பாருடைய அன்பு நிறைந்தமனத்திலே அவர்கள் உவப்புற பொருந்தி யிருந்து நிறைந்த ஞான ஒளி யை வீசுகின்ற நிறத்தையுடையனவான திருமுகங்கள் ஆறு கொண்டவராவர் முருகப்பெருமான்.

அந்த ஆறுமுகங்களில் :—

ஒன்று பரந்த பரப்பினை யுடைய இம்மண்ணுலகத்தே சூழ்ந்து கிடக்கும் இருளையும் அதில் வாழும் மக்களின் மனத்தே விளங்கும் அஞ்ஞான இருளை யும் ஒருங்கே போக்கியருளி அதனை ஜீவான்மாக்களிடத்தில் யாதொரு குற்ற மும் இல்லையாம்படி விளங்க பலகிரணங் களையும் தோற்றுவித்து அருளவல்லது ஒரு திருமுகம்.

இரண்டாந் திருமுகம் தன்னையே ச... ணென்று அடைந்துநிறைந்தஅன்பொ... துதிசெய்வார்க்கிரங்கி அவர்கள் மன... தே உவப்புறப் பொருந்தியிருந்து அவ... கட்கு இனிமையாக நடந்து அவர்கள் பால் சென்ற பேரருட்காதலாலே மகிழ் ந்து அவர்கள் வேண்டும் இகம்பர... என்றியம்பும் இரண்டு மினிதருளி ம... றும் எல்லாம் முற்றுப்பெற முடித்த அளிக்கவல்லது ஒரு திருமுகம்.

மூன்றாந் திருமுகம் குற்றமற்ற மந்திர... கள் கொண்ட வேதத்திற் கூறிய முறை... மை இடதது வழுவாது தவமியற்றியு... அந்த வேதத்தின் முடிவான கருத்து... பொருளையே நோக்குவாருமான அந்... ணர்கள் தாம் இயற்றும் யாகங்க... குறைவற நிறைவேறுதற்கு யாதொரு... இடையூறும் வாராவண்ணம் திருவருள் புரிய நினையா நிற்பது ஒரு திருமுகம்.

நான்காவது திருமுகம் தேவர்க்கும் உயர்ந்த ஞானிகட்கும் உபதேசிக்க... படாமலும், இவ்வுலகத்தில் வழக்கத்... வில்லாததும் வேதங்களிலும் ஞானநூ... களிலும் நிறைந்து மறைந்து விளங்கு... எஞ்சிய ஞானப் பொருள்களை நன்... ஆராய்ந்து தேவ இருடிகள் மகிழ்ந்... உணரும்படி உணர்த்தியும் சந்திரனை... போல திக்குகளை விளங்கும்படி செ... வித்தருளுவது ஒரு திருமுகம். (வரும்

கா. அ. நடேச செட்டியார்

தமிழ்த்தாய் வணக்கம்

(35-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐவேறுருவிற் செய்வினை முற்றிய
இலக்கணமுடிகொடு நலத்தகுகடவுளாம்
மகேந்திரநாட்டு மாகேசுரரும்,
திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும்,
பேராற்றையடுத்த பெருந்துறையூரில்
சீராற் பெருநூல் செப்பிய புலவனும்,
இயனூல் செய்த இயற் பாவலனும்
இடைகழி நாட்டை யுடையசெங் கோட
[னும்,
பெருவளநாடாண் டிருந்தசெங்கோனும்
தக்கார்புகழும் சக்கரப்புலவனும்,
குன்றமெரிந்த குமரவேளும்,
சந்தனப்பொதிகைச் செந்தமிழ்முனியும்,
ஐந்திரமளித்த இந்திரனும்,
ஒல்காப்பெரும் புகழ் தொல்காப்பியரும்,
இறையனார் அகப்பொருள் இயற்றிய
[இறைவரும்,
முடிக்கச்சிறந்து நடிக்குநங்காய்!
நின்சிறப்புரைக்க என்போலியர்கட்
காகுமோ, ஆகுமோ, ஆகுமோ, ஆகுமோ!
கராக்கவர்பாலனைக் குராப்புனையண்ணல்
திருவருளாலே யுருப்பெற வாக்கியும்,
தருமிதனக்குப் பொருடனை யளித்தும்,
புத்தனார் தலையுடன் தர்க்க வழிந்தும்,
ஆக்கியு மளித்தும் நீக்கியும் புரக்கும்
தன்னுடைப் பெருமை தானே யறியா
மின்சடைப் பெருமான் தன்செய்கை
[யன்ன
முத்தொழில்நடாத்தும் சித்தருமாதே!
கணிகண்ணற்காக் காஞ்சியைநீங்கிச்
செந்நாப் புலவன் செல்லப் பின்னால்
பைந்நாகப்பாய் பற்றிக்கொண்டு
மணிவணப் பெருமாள் வழிகொளச்
[செய்தாய்!
அருந்தமிழ்க்கிழவி ஔவைக்காகப்
பட்டுக்கிடந்த பனந்துண்டங்களைப்
பங்குக்குமூன்று பழந்தரச்செய்தாய்!
கல்வியிற்பெரிய கம்பருக்காகப்
பயிரினைமேய்ந்த பரிமாவதனின்
உயிரதுநீங்கவும் உயிர்க்கவும்செய்தாய்!
கருவேரறுக்கும் திருவொற்றியூரில்
தொண்டத் தொகையுரை வன்றொண்
[டற்கா
அகமகிழ்ந்திடவே மகிழடிக்கீழே
இந்தணிவானை வந்துறசெய்தாய்!
தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்
கூடலாலவாய் மாடமதுரையில் [தாய்
பாடற்றொழிலேபான்மையாக்கொண்ட
இசைசொள்பாணற்கா இசைவாது
[வென்ற
அளப்பில் பெருமை அளக்கில் நினதல
[வோ!
இன்னுங்கேண்மோ நின்னுடைப்பெரு
[மை
நீற்றறைகுளிர மாற்றுதல்செய்தாய்,
ஆலம்தானும் அமுதாச்செய்தாய்,
கடலிற்கல்லே படவாச்செய்தாய்,
அடுகளிறேதான் அடியார்பாதம்
தொடுகளிறாகவும் தொட்டிடச்செய்
(உனக்கு) [தாய்;
அட்டமாசித்திகள் அரியதல்லவே;
(உன் மகிமையால்)
புனலெதிரேடு செல்லெனச்செல்லுமே,
கனலிலேடிடப்பச் சென்றிருக்குமே,
பனையிலாண்பனை பெண்பனையாகுமே,
திருமடத்தீமெலச் செழியற்சேருமே,
கொள்ளம்பூதூர் வெள்ளத்திலோடம்
திசைதெனத்திசழுமே; திருமறைக் காட்
[டில்
மறைக்கதவதனைத் திறக்கவும்மூடவும்
செய்தனை; பின்னும் செழியன்கூனை
நிமிர்த்தவும் செய்தனை; நீற்றின் பெரு
[மையை
சைவப்பெருமை அறியாச்சமணர்க்கு
அறிவுகொளுத்தினை; ஆவடுதுறையில்
காழிப் பெருமான் காசுறச்செய்தனை;
செப்பும்பெருமைச் செங்கோடதனில்
வெப்புநோய்நீங்க விளம்பினை; நல்லூர்ப்
பெருமணமதனில் பெரியதேவர்க்கும்
அரிதாயசெயலாம் அழிவிலாமுத்தியை
மணத்திற்குவந்த கணத்தர்க்கெல்லாம்
வாரிக்கொடுத்த வன்சத்தியலவோ!
அம்ம! நின்திறம் அம்ம! நின்புகழ்
இத்தரைமட்டோ? இல்லை! இல்லை!
சேரமான்உலாவால் திருக்கைலாயம்
வரைக்கும்பரந்தது; உரைக்கும்புகழெ
[லாம்
மனத்திற்கொண்டோ? மனிதருயய
[வோ?
மூத்தபிள்ளையும், முருகக்கடவுளும்,

மலைமகள் கலைமகளா மணங்குகளும்,
அரனயனரிமுதலா மூத்தேவரும்,
இந்திரன்முதலா எண்டிக்கிறைவரும்,
அகத்தியர்முதலா சகத்திற்றவரும்,
பேசினர், எழுதினர், பீடுறப்பாடினர்,
என்றால், நின்சீர், ஒன்றுமிலாத
நாயேன் புகழ்வது நன்றுகொல்! நன்று [கொல்!
எல்லாவாழ்வும் இனிதுறக்கொடுக்கும்
வல்லாள்உனக்கு வாழ்த்துக்கூறல்
நன்று நன்று! அன்று சேந்தன்
பல்லாண்டெடுத்த பரமற்கன்பால்
பல்லாண்டுபாடிய பான்மையதுபோல்
செம்பொருள்பயக்கும் சீரியதெய்வமே
என்னேநின்திறம் என்னேநின்சீர்
என்னேநின்புகழ் என்னேநின்செயல்
என்றித்திறம்பட என்புநைந்துருக
நெஞ்சநெக்குருக அஞ்சலிகூப்பி
மெய்புளகெடுப்ப மயிர்சிலிர்ப்பெய்த
நாத்தழுதழுப்ப நயந்துவாழ்த்திநின்
செஞ்சிலம்பணியும் சீரடிபரவுவாம்.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

மாணிக்கவாசகர்

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியார்க்கு எளியராகிய சிவபெருமான் நாயனாரது துன்பத்தை ஒழிக்கவும் வந்தியென்னும் மூதாட்டியின் சிவபக்தியை உலகத்தவர்களுக்கு வெளிப்படுத்தவும் திருவுளங்கொண்டு வைகையாற்றை மதுரைமா நகர்மீது பெருக விடுத்தார். அது மென்மேலும் நகரையே யழிப்பதுபோலப் பெருகியது. இதை யறிந்த பாண்டியன் சொக்கலிங்கப் பெருமானைப் பலவாறு போற்றினான். வெள்ளம் சிறிதும் குறையாமையால் பெருக்கிற்குக் காரணம் தான் மாணிக்கவாசகருக்குத் துன்பஞ் செய்ததேயென்று எண்ணி அவரைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்துத் தான்செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்படிப் பிரார்த்தித்தான். அல்லாமலும் வைகைக் கரையை அடைப்பித்தலில் அவரைத் தனக்குத் துணைசெய்யும்படியும் வேண்டினான். வேண்டுதல் வேண்டாமையிலாத நாயனார் சிவபிரானிடம் பதிந்த உள்ளத்தினராய் நகரிலுள்ளார் அனைவர்க்கும்வைகைக்கரையை அடைக்கும் பொருட்டுக் கூறுசெய்து கொடுப்பாராயினார். அவர் ஏவியபடியே நகரத்தார். கரையை அடைத்து வந்தார்கள்.

ஆனால் சிவபக்த சிரோமணியாகிய வந்தியென்னும் பிட்டு வாணிச்சியின் பங்கு மாத்திரம் அடைக்கப்படவில்லை. இதை அறிந்த அரசனுடைய ஏவலாளர்கள் அவளை நெருக்குவாராயினர். இதனால் அவள் சோமசுந்தரப் பெருமான் திருக்கோயிலை அடைந்து தன் பிட்டைக் கூலியாகப் பெற்றுக்கொண்டு தன் பங்கை அடைப்பாரில்லாமையையும் தனக்குப் பந்து மித்திரர்கள் ஒருவரும் இல்லாமையையும் பற்றிச் சொக்கலிங்கப் பெருமானுக்கு முறையிட்டாள். வேண்டுவார் வேண்டுவதை ஈபவராகிய சிவபிரான் அவளுக்கு இரங்கித்தாமே கூலியாளாக எழுந்தருளிவந்து அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு வைகைக் கரையை அடைப்பவர்போல் நடித்தனர். மற்றைக் கரைகளெல்லாம் அடைபட்டிருக்கவும் வந்தியின் கரை மாத்திரம் அடைபடாமையைக் கண்ட அரசன் கூலியாளாகிய கடவுளைப் பிரம்பினால் அடித்தான். அவ்வடியானது பாண்டியனை உள்ளிட்ட அனைவர் மேலும் பட்டது. இதனால் இறைவனது சருவ வியாபகம் விளங்குகின்றதல்லவா? பாண்டியன் இவைகளெல்லாம் தம்மடியாராகிய மாணிக்கவாசகர் பொருட்டுச்

தமிழ்த்தாய் வணக்கம்

(35-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐவேறுருவிற் செய்வினை முற்றிய
இலக்கணமுடிகொடு நலத்தகுகடவுளாம்
மகேந்திரநாட்டு மாகேசுரரும்,
திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும்,
பேராற்றையடுத்த பெருந்துறையூரில்
சீராற் பெருநூல் செப்பிய புலவனும்,
இயனூல் செய்த இயற் பாலனும்
இடைகழி நாட்டை யுடையசெங் கோட
[னும்,
பெருவளநாடாண் டிருந்தசெங்கோனும்
தக்கார்புகழும் சக்கரப்புலவனும்,
குன்றமெரிந்த குமரவேளும்,
சந்தனப்பொதிகைச் செந்தமிழ்முனியும்,
ஐந்திரமளித்த இந்திரனும்,
ஒல்காப்பெருப்புகழ் தொல்காப்பியரும்,
இறையனார் அகப்பொருள் இயற்றிய
[இறைவரும்,
முடிக்கச்சிறந்து நடிக்குநங்காய்!
நின்சிறப்புரைக்க என்போலியர்கட்
காகுமோ, ஆகுமோ, ஆகுமோ, ஆகுமோ!
காக்கவர்பாலனைக் குராப்புனையண்ணல்
திருவருளாலே யுருப்பெற வாக்கியும்,
தருமிதனக்குப் பொருடனை யளித்தும்,
புத்தனார் தலையுடன் தர்க்க வழிந்தும்,
ஆக்கியு மளித்தும் நீக்கியும் புரக்கும்
தன்னுடைப் பெருமை தானே யறியா
மின்சடைப் பெருமான் தன்செய்கை
[யன்ன
முத்தொழில்நடாத்தும் சித்தருமாதே!
கணிகண்ணற்காக் காஞ்சியைநீங்கிச்
செங்காப் புலவன் செல்லப் பின்னால்
பைந்நாகப்பாய் பற்றிக்கொண்டு
மணிவணப் பெருமாள் வழிகொளச்
[செய்தாய்!
அருந்தமிழ்க்கிழவி ஔவைக்காகப்
பட்டுக்கிடந்த பனந்துண்டங்களைப்
பங்குக்குமூன்று பழந்தரச்செய்தாய்!
கல்வியிற்பெரிய கம்பருக்காகப்
பயிரினைமேய்ந்த பரிமாவதனின்
உயிரதுநீங்கவும் உயிர்க்கவும்செய்தாய்!
கருவேரறுக்கும் திருவொற்றியூரில்
தொண்டத் தொகையுரை வன்றொண்
[டற்கா
அகமகிழ்ந்திடவே மகிழடிக்கீழே
இந்தணிவானை வந்துறசெய்தாய்!
தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்
கூடலாலவாய் மாடமதுரையில் [தாய்
பாடற்றொழிலேபான்மையாக்கொண்ட
இசைசொள்பாணற்கா இசைவாது
[வென்ற
அளப்பில் பெருமை அளக்கில் நினதல
[வோ!
இன்னுங்கேண்மோ நின்னுடைப்பெரு
[மை
நீற்றரைகுளிர மாற்றுதல்செய்தாய்,
ஆலம்தானும் அமுதாச்செய்தாய்,
கடலிற்கல்லே படவாச்செய்தாய்,
அடுகளிறேதான் அடியார்பாதம்
தொடுகளிறாகவும் தொட்டிடச்செய்
(உனக்கு) [தாய்;
அட்டமாசித்திகள் அரியதல்லவே;
(உன் மகிமையால்)
புனலெதிரேடு செல்லெனச்செல்லுமே,
கனலிலேலிடப்பச் சென்றிருக்குமே,
பனையிலாண்பனை பெண்பனையாகுமே,
திருமடத்தீமெலச் செழியற்சேருமே,
கொள்ளம்பூதூர் வெள்ளத்திலோடம்
திகழெனத்திகழுமே; திருமறைக் காட்
[டில்
மறைக்கதவதனைத் திறக்கவும்மூடவும்
செய்தனை; பின்னும் செழியன்கூனை
நிமிர்த்தவும் செய்தனை; நீற்றின் பெரு
[மையை
சைவப்பெருமை அறியாச்சமணர்க்கு
அறிவுகொளுத்தினை; ஆவடுதுறையில்
காழிப்பெருமான் சாசுறச்செய்தனை;
செப்பும்பெருமைச் செங்கோடதனில்
வெப்புநோய்நீங்க விளம்பினை; நல்லூர்ப்
பெருமணமதனில் பெரியதேவர்க்கும்
அரிதாம்செயலாம் அழிவிலாமுத்தியை
மணத்திற்குவந்த கணத்தர்க்கெல்லாம்
வாரிக்கொடுத்த வன்சத்தியலவோ!
அம்ம! நின்திறம் அம்ம! நின்புகழ்
இத்தரைமட்டோ? இல்லை! இல்லை!
சேரமானுலாவால் திருக்கைலாயம்
வரைக்கும்பரந்தது; உரைக்கும்புகழெ
[லாம்
மணத்திற்கொண்டோ? மனிதருயய
[வோ?
மூத்தபிள்ளையும், முருகக்கடவுளும்,

மலைமகள் கலைமகளா மணங்குகளும்,
அரனயனரிமுதலா முத்தேவரும்,
இந்திரன்முதலா எண்டிக்கிறைவரும்,
அகத்தியர்முதலா சகத்திற்றவரும்,
பேசினர், எழுதினர், பீடுறப்பாடினர்,
என்றால், நின்சீர், ஒன்றுமிலாத
நாயேன் புகழ்வது நன்றுகொல்! நன்றுகொல்!
எல்லாவாழ்வும் இனிதுறக்கொடுக்கும்
வல்லாள்உனக்கு வாழ்த்துக்கூறல்
நன்று நன்று! அன்று சேந்தன்
பல்லாண்டுசெடந்த பரமற்கன்பால்
பல்லாண்டுபாடிய பான்மையதுபோல்
செம்பொருள்பயக்கும் சீரியதெய்வமே
என்னேநின்திறம் என்னேநின்சீர்
என்னேநின்புகழ் என்னேநின்செயல்
என்றித்திறம்பட என்புநைந்துருக
நெஞ்சநெக்குருக அஞ்சலிகூப்பி
மெய்புளகெடுப்ப மயிர்சிலிர்ப்பெய்த
நாத்தழுதழுப்ப நயந்துவாழ்த்திநின்
செஞ்சிலம்பணியும் சீரடிபரவுவாம்.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

மாணிக்கவாசகர்

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியார்க்கு எளியராகிய சிவபெருமான் நாயனாரது துன்பத்தை ஒழிக்கவும் வந்தியென்னும் மூதாட்டியின் சிவபக்தியை உலகத்தவர்களுக்கு வெளிப்படுத்தவும் திருவுளங்கொண்டு வைகையாற்றை மதுரைமா நகர்மீது பெருக விடுத்தார். அது மென்மேலும் நகரையே யழிப்பதுபோலப் பெருகியது. இதை யறிந்த பாண்டியன் சொக்கலிங்கப் பெருமானைப் பலவாறு போற்றினான். வெள்ளம் சிறிதும் குறையாமையால் பெருக்கிற்குக் காரணம் தான் மாணிக்கவாசகருக்குத் துன்பஞ் செய்ததேயென்று எண்ணி அவரைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்துத் தான்செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்படிப் பிரார்த்தித்தான். அல்லாமலும் வைகைக் கரையை அடைப்பித்தலில் அவரைத் தனக்குத் துணைசெய்யும்படியும் வேண்டினான். வேண்டுதல் வேண்டாமையிலாத நாயனார் சிவபிரானிடம் பதிந்த உள்ளத்தினராய் நகரிலுள்ளார் அனைவர்க்கும்வைகைக்கரையை அடைக்கும் பொருட்டுக் கூறுசெய்து கொடுப்பாராயினார். அவர் ஏவியபடியே நகரத்தார் கரையை அடைத்து வந்தார்கள்.

ஆனால் சிவபக்த சிரோமணியாகிய வந்தியென்னும் பிட்டு வாணிச்சியின் பங்கு மாத்திரம் அடைக்கப்படவில்லை. இதை அறிந்த அரசனுடைய ஏவலாளர்கள் அவளை நெருக்குவாராயினர். இதனால் அவள் சோமசுந்தரப் பெருமான் திருக்கோயிலை அடைந்து தன் பிட்டைக் கூலியாகப் பெற்றுக்கொண்டு தன் பங்கை அடைப்பாரில்லாமையையும் தனக்குப் பந்து மித்திரர்கள் ஒருவரும் இல்லாமையையும் பற்றிச் சொக்கலிங்கப் பெருமானுக்கு முறையிட்டாள். வேண்டுவார் வேண்டுவதை ஈபவராகிய சிவபிரான் அவளுக்கு இரங்கித்தாமே கூலியாளாக எழுந்தருளிவந்து அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு வைகைக் கரையை அடைப்பவர்போல் நடித்தனர். மற்றைக் கரைகளெல்லாம் அடைபட்டிருக்கவும் வந்தியின் கரை மாத்திரம் அடைபடாமையைக் கண்ட அரசன் கூலியாளாகிய கடவுளைப் பிரம்பினால் அடித்தான். அவ்வடியானது பாண்டியனை உள்ளிட்ட அனைவர் மேலும் பட்டது. இதனால் இறைவனது சருவ வியாபகம் விளங்குகின்றதல்லவா? பாண்டியன் இவைகளெல்லாம் தம்மடியாராகிய மாணிக்கவாசகர் பொருட்டுச்

சிவபிரான் புரிந்த திருவிளையாடல்களென்று அறிந்தான். பின்பு அவரிடம் சென்று தான் அறியாமை காரணமாகச் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொண்டு, தன் அரசுரிமையை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். அவர் அவ்வேண்டுகோளை மறுத்துச் சிவ வேடம் பூண்டுத் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளி அங்குச் சிலகாலம் வசித்திருந்தார். பிறகு, திருவுத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களை வணங்கி அவ்வவ்விடங்களில் திருவாசகம் பாடியருளினார். கடைசியாகச் சிதம்பரத்தை அடைந்து அங்கு அமர்ந்திருந்தார்.

இவர் இங்ஙன மிருக்கும் நாளிலே சோழ தேசத்துச் சிவபத்தர் ஒருவர் தலயாத்திரையின் பொருட்டு ஈழ மண்டலத்திற்குப் போயிருந்தார். அவர் அடிக்கடி பொன்னம்பலம் வாழ்க என்று சொல்லுவது வழக்கம். அவர் செய்கையைக் கேள்வியுற்ற அந்நாட்டுப் பௌத்த அரசன் அவரை அழைப்பித்து அவா மூலமாகச் சிதம்பரத்தின் சிறப்பை அறிந்துகொண்டான். சிதம்பரத்திலுள்ள சிவாலயத்தை அழித்து அவ்விடத்தில் பௌத்தாலயம் ஒன்று கட்டுவிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் புத்த குருவோடும் தன் ஊமை மகளோடும் சிதம்பரத்தை அடைந்து தில்லைவாழந்தணர்களை வாதத்திற்கு அழைத்தான். புத்தகுருவோடு வாதத்திற்குத் தக்கவரைத் தில்லையிலுள்ளார் தேடுவாராயினார். அப்போது நடராஜ பெருமான் நம் மாணிக்கவாசகரைக் குறிப்பிக்கவும் அங்ஙனமே அவரை வரவழைத்தனர். சுவாமிகள் புத்தனுடன் வாதஞ் செய்து அவனை வென்றதுமன்றி அவன் நிகழ்த்திய வினாக்களுக்குப் பிறவிதொட்டு ஊமையாயிருந்த பௌத்த அரசனது பெண்ணைக் கொண்டு உத்தரஞ் சொல்லுவித்தார். இதுவே திருச்சாழலாகும். பிறகு பௌத்தரெல்லாம் சைவராய்ச் சுவாமிகளை வணங்கினார்.

சுவாமிகள் சிதம்பரத்தில் வசித்தருளும் நாளிலே அவருடைய திருவாசகத்தைப் பரவச் செய்யவேண்டுமென்னும் பெருங் கருணையினாலே சிவபிரான் பிராமண வேடம்பூண்டு அவரிடம் எழுந்தருளி அவர் சொற்படித் திருவாசகம் முழுவதையும் எழுதிக்கொண்டு திருச்சிற்றம்பல முடையாராகிய தம்மீது ஒரு கோவைப் பிரபந்தமும் பாடுவித்து அதனையும் எழுதித் தம் கையெழுத்திட்டுச் சிதம்பர சிற்சபை வாயிலிலுள்ள பஞ்சாக்கரப்படியிலே வைத்தருளினார். அவ்விரு நூல்களையும் பூசை செய்யச் சென்ற அருச்சகர் கண்டு பேராச்சரியமுற்று அடியாரெல்லார்க்கும் சொல்ல அவர்கள் அந்நூல்களின் பொருளை அறிய விரும்பியவர்களாய் மாணிக்கவாசகரிடஞ் சென்றார்கள். அவர் எல்லோரையும் பொன்னம்பலத்திற் கழைத்து வந்து தம் நூற்களுக்குப் பொருள் இவரே என்று சபாநாதப் பெருமானைச் சுட்டிக்காட்டி எல்லாரும் காணத் தாம் கனகசபையுள் புகுந்து அம்மூர்த்தியின் குஞ்சிதபாத நீழலிலே இரண்டறக் கலந்தார். இவர் இங்ஙனம் முத்தியடைந்த தினம் ஆனி மாதத்து மக நக்ஷத்திரமாகும்.

சுவாமிகளை நந்தியந்தேவர் அவதாரமென்பர். இதனை "குராமலரோடு அராமதியஞ் சடைமேற் கொண்டார், குடமுழ நந்திகளை வாசகனாக் கொண்டார்" என்னும் அப்பமூர்த்திகள் திருவாக்கு மெய்ப்பிக்கும். இவர் மற்றைய சமயாசாரியர்களுக்கு முன் விளங்கியவர் என்பதும் மேற்படி பாசுரத்தாலேயே அறியக் கிடக்கின்றது. இவருக்குக் குருந்தமரத்தின் கீழ்த் தக்ஷிணா மூர்த்தமாய் எழுந்தருளிப் பரமசிவன் அறிவுறுத்திய நூல சிவஞானபோதம் என்ப. இவர் அறுபான்மும்மை நாயன்மாரிற் சேராத தனியடியவர். இவர் சிவஞானமுற்று அறிவாற் சிவனேயாய் விளங்கியவர். இதைக் குறித்தே இவருக்கு எல்லாச் சைவாலயங்களிலும் மார்கழி மாதத்திலே திருவிழா நடத்தப்பட்டு அக்காலங்களில் இவர் வாய்மலர்ந்த திரு

வெம்பாவைமட்டும் ஓதப்படுகின்றது. இவர் உபதேசம்பெற்ற திருப்பெருந்துறையிலே இவருக்கென்றே உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. அக்காலங்களில் இவருக்கு இடபவாகன முதலிய பல வாகனங்களுமுண்டு.

தமிழ்வேதமாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் சைவத்திருமுறையில் 8-வதாக விளங்குகின்றன. திருவாசகமானது கல்நெஞ்சையும் கரையச் செய்யக்கூடியது. மனதை உருகச் செய்வதில் இதற்கு நிகரான நூல் இவ்வுலகில் வேறில்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்[கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும நாய[கனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யான் ஊறுபடாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்.

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை.

சந்திரமதி

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது அகங்காரமெல்லாம் அப்போதே பறக்கும். அம்மன்னனது காட்சியின் பெருமையையே அது விரிக்கும். அக்கண்களைக் கண்ட புண்பட்ட மனமெதுவும் கிளைத்துச் செழிக்கும். கல்விக் கடலைக் கடந்த அம்மன்னன், செல்வக்கடலைக் கடைந்து யாவரது ஏழ்மையையும் போக்கும் ஈகை அமுதை அளித்துக் களிப்பூட்டி விளங்கினான். அன்பால் பணியும் ஜனங்களது துன்பமெலாம்போக்கிச் சுகந்தரும் அவ்விராசராஜன்

வாய்மைபகர் வாயான் மதியமைச்சர் கைப்பு[ரையும்
நேயமொழி கேட்டு நெடுஞ் செவியன்—மீயுல
கந்தரநேர் கையான் கருமந் தரப்புயத்தா[வும்
னந்திலரு ணட்டத்தா னல்.

இவ்வாறு அவ்விராஜராஜன் அரசாளும் நாள்களில் ஓர்நாள், மேகத்திடைக் களங்கமற்ற வெண்பறவைகள் ஒன்று கூடிப் பறந்து சாயங்கால வேளையில் பேரன்போடு பழங்கள் நிறைந்த மரத்தை அடைவதுபோல தேசாடனஞ் செய்து தேஜோமயமாக விளங்கும் பெருமுனிவர்கூட்டம் அந்நகரத்து அரசாட்சி மண்டபம் அணுகிற்று. அதை அறிந்த அரசன் விதிப்படி அவரை ஏற்று, மரியாதை செய்து, தனதாசனத்தும் மற்றும் அயலிலிருந்த ஆசனங்களிலு மிருத்தி, எதிர் நின்று வணக்கத்துடன் அத்தபோதனர்கள் வரவைக் கொண்டாடி, அவரது யாத்திரையிற் கண்ட விசேஷங்களை விவரிக்கும்படி வேண்டினன். அம்முனிவர்களும் தாம் கண்ட விஷயங்களை யெல்லாம் யாவரும் வியக்க விரித்தனர்; கன்னோசி நாட்டில் கண்டகியாற்றில் தீர்த்தமாடிய வைபவத்தை விவரித்தனர்; அங்கே அவர் பெரும் அதிசயங் கண்டதாகவும் கூறினர். அதிசயத்தையறிய அவாக்கொண்ட அரசன் அது யாதெனக் கேட்க முனிவர் கூறுவர்;

"அரசே! அந்நாட்டையாளும் மன்னன் மதிதயன், பிறைமுடி சூடிய பெம்மான் இறைவன் சிவபெருமானது அருளால் ஓர் கன்னிகையைப் பெற்றுள்ளான். தம்மைப் பகைத்து அழிக்குஞ் சூரியனையே சேரக் கற்புமிக்க அவளது கேசபந்தியாக இருளே அமைந்ததோ வெனினும் தவறாதது. அவ்விருளை ஓட்ட வளர்ந்தெழுந்த பிறைபோன்ற அவள் நெற்றியில் அணிந்த செஞ்சாந்துப் பொட்டு, அப்பிறையைத் தவழும் ரோஹிணி நட்சத்திரத்தை ஒக்கும். புருவங்கள் காதோடுபேசித் துடிக்கப்பார்க்கும். அவளது பார்வை பட்ட மரங்களையும் காய்ந்த எலும்புகளையும் மீண்டு

உயிர்பெற்றுத் தழைக்கச்செய்யும் சக்தி வாய்ந்துள்ளனவென்பது மிகையாகாது. அணியும அணிகளுக்கே அழகு செய்யும் அவளது அழகைச் சுமந்த இடை மாயமாக விருப்பதும் ஒரு மாயந்தான். அவள் பேச்சைக்கண்ட கிளிகள் குழறும்; குயில்கள் வெட்கிக் கூவும். அவள் முகப்பொலிவைக்கண்ட சந்திரன் மனங்குன்றித் தேயவாரம்பித்தானென்பது நிச்சயம். மற்று அவளது அழகை விரிப்பது அசாத்தியம்; அவள்

மண்ம டந்தையர் தம்முளும் வாசவ னுறையும்
விண்ம டந்தையர் தம்முளும் நிகரிலர் விறல்வேற்
கண்ம டந்தையர் தண்குழ லருந்ததி கற்பிற்
கெண்ம டங்குகற் புடையளிந் திளையினு மெழிலாள்.

அப் புண்ணியவதியின் அழகின் பெருக்கைக் காணாத கண்ணென்ன கண்ணோ? அவள் கன்னி; இன்னும் மணமாகாதவள். அவளை மணக்க வந்த மன்னவர் அநேகர். எனினும், அவள் தந்தை இந்து சேகரக்கடவுள் குறித்தவனுக்கே கொடுப்பதென உறுதிகொண்டிருப்பதாகவும் கேட்டிருக்கிறோம். அக்கன்னி காமனது சேமநிதி; அதைப் பெறுவது உனக்கே தகுதி; அதுவே விதித்த விதி.”

இம்மொழிகளைக் கேட்ட மன்னன் காமப் பெருநெருப்பு கருத்தை எரிக்க, உணர்வுகலங்கி, அக்காமக் கொடிபூத்த மதிபதியாகிய சந்திரமதியைத் தான் எவ்வாறு அடையலாமென வெண்ணி, அம்முனிவர்களை நோக்கி “பெரியோர்களே! இப்பெண்ணின் அழகால் என் மனத்தைக் குடையச் செய்த தாங்களே இந்த மனோவேதனையை மாற்றக் கடமைப்பட்டவர்களானீர்கள். என்னை அக்கன்னோசி நாட்டரசன் மகளைக் கடிமணங்கொள்ளச் செய்யும் தருமம் உமதேயாகும். என் மனத்தைக் கொள்ளை கொள்ளுமாறு தூண்டிய தாங்களே இப்போதாதரித்தல் தமக்குப் பெருமை; எனக்கும் இன்பம்.

அந்தணர் என்போர் அறவோர்மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

அல்லவா? அடியேன் வருந்தத் தாய் போலும் நீங்கள் சும்மா இருக்கமாட்டீர், அது நிச்சயம். எனினும் நான் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து தாங்களே அம்மன்னன்பால் சென்று அம்மகளை மணம்பேசி எனது தருமத்திலீடுபடச் செய்வீர்களாக! தருமத்தைச் செய்வதால் தவறெப்படி வரும்? ஒரு நாளும் நான் உமது உதவியை மறவேன். அவ்வுதவி என்றும் நிலைத்து விளங்குமென்பது திண்ணம்” எனக் கூறித் தனது விருப்பத்தை வெளியிட்டு அம்முனிவர் கூட்டத்தின் முன் சாஷ்டாங்க தண்டன் ஸமர்ப்பித்து அவரது அனுக்ரஹத்தையே எதிர்பார்த்து நின்றான்.

அப்பொழுது எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது; மன்னன் மனத்துள் மயக்கமும் அச்சமுமே குடிகொண்டிருந்தன; மழை பெய்யுமுன் வானங் கவிந்து விளங்குவது போலவே அக்காலமுமிருந்தது.

முனிவர்கள் மன்னனது வேண்டுகோளுக்கிரங்கிக் கன்னோசி நாடு செல்லப் புறப்பட்டனர்.

வல்லியிடைச் சென்ற மனம்வட்டெகன் வாட்டத்தைச்
சொல்லியிவண் யாறுறத் துன்னிடுமோ?— அல்லதிவ்வா
றீந்திடுமோ வாதையெனக் கீதலுறும் வாதை
தாழ்ந்திடுமோ ஏறிடுமோ தான். [உது

மறையவர் கூட்டம் மறைந்தது. அதே ஸமயம் ஞானம், நல்லொழுக்கம், செம்மை என்னும் முப்படைத் தளைகளால் அணையிடப்பட்ட அவ்வரசனது ஆசைப் பேராறு, கன்னோசி மன்னன் மகளாகிய அந்தச் சந்திரமதியின் அழகுப் பெருக்கு என்னும் அடக்கமுடியாப் புது வெள்ளத்தின் விசையால் தாக்கப்பெற்று, அணையுடைந்து கரைபுரண்டு சிந்தனைக்காட்டில் பாய்ந்தோடத் தலைப்பட்டது. சபையை விட்ட அவ்வரசன் யோசனையற்ற பித்தரைப்போலத் தனது படுக்கையறையை அடைந்து பள்ளியிற் கிடந்த கோலமாகவே, மாரவேள் விட்ட மலர் அம்பு மார்பைப் பிளக்க மனம் வருந்தலானான். (தொடரும்.)

வி. சேஷகிரி சாஸ்திரி, பி.ஏ.

புகழ்பட வாழ்தல்

புகழ்படவாழ் என்று முன்னோருங் கூறுவர். புகழாவது நம்மால் எய்தப்படும் பேறுகளுள்ளே மிக்கு விளங்கும் ஒருபேறு. புகழ்போன்று விளங்கும் பேறு வேறில்லை. "ஈத லிசைபட வாழ்தலதுவல்ல தூதியமில்லை யுயிர்க்கு" என்றார் வள்ளுவர். இராப்பகல் முயன்று வருந்தித் தேடுவன எவற்றுள்ளும் புகழ் ஒன்றுதான் அழியாமல் என்றும் நிலைபெற்று விளங்கும் இயல்புடையது. புகழுடம்பு, பூதவுடம்பு என உடம்பு இரண்டு என்றும் புகழுடம்பு பொன்றுதலின்றி என்றும் நிலைபெற்று விளங்கும் என்றும், பூதவுடம்பு சிறிதும் நிலைபேறின்றி அழிவெய்தும் என்றும் அறிஞர் கூறுவர்.

சூளாமணி.

ஒருவன திரண்டி யாக்கை யூன்பெய்து நரம்பு போர்த்த
உருவமும் புகழு மென்றாங் கவற்றினு ளூழின் வந்து
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திறு மற்ற யாக்கை
திருவமர்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே.

புகழ்பட வாழ்தலில்லாதவன் இருந்தென்ன! இறந்தென்ன! "காதவழி பேரில்லானைக் கழுதையெனப் பாரிலுள்ளோர் கருதுவாரே" என்று மேலோருங் கூறுவர். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலனேவா வானவூர்தி யெய்துப வென்ப" என்று புறநானூறுங் கூறும்.

புகழ்பட வாழ்தற்குக் கல்வி செல்வம் ஆண்மை முதலியன முக்கிய காரணங்களாகும். பல நூல்களையுங் கசடறக் கற்று நூலுரைகளைச் செய்தல், மாணவகர்க்கு உபதேசித்தல், ஐயந் தீரப் பொருளை உணர்த்தல் முதலியவற்றால் வரும்புகழ் கல்வியாற் பெறும் புகழாகும். வடமொழி தென்மொழிகளிலே நூலுரைகளைச் செய்துவைத்த எத்தனையோ புலவர்கள் தத்தம் நூலுரைகளாற் சொல்லப்படும் புகழுடம்புடையராய் இன்னும் விளங்குகின்றனர். காளிதாசர், மாகர், வள்ளுவர், கம்பராம் முதலியோரை மறந்தவர் யாவர்? நூலுரைகளைப் பிழைபட இயற்றிப் பிரகடனஞ் செய்தல், வாக்கியங்களிலே வழுவுதல், கல்லாத மேற்கொண்டொழுகல், பரீக்கையில் வழுவுதன் முதலியன புகழ்பயப்பனவல்ல.

நூலுரைகளைச் செய்வித்தல், சத்திரம் தடாகம், வித்தியாலயம், தேவாலயம் முதலியவைகளைத் தாபித்தல் இரந்தார்க்கீதல், அடைந்தோர்ப்புரத்தல் முதலியவற்றாற் பெறும்புகழ் செல்வத்தாலடையும் புகழாகும். செல்வத்தாற் புகழ் பெற்றோர் எத்தனையோ பலராவர். பாரதம், இராமாயணம் முதலியன நோக்கி அறிக. சிலர் அளவிலமையாது மாட மாளிகைகளிலும் உடையுத்தரங்களிலும் ஊர்தி முதலியவைகளிலும் பெரும்பொருள் செலவு செய்கிறார்கள். அவற்றால் வரும்புகழ் தகுதியும் நிலைபேறுமுடையதன்று.

புகழ்பட வாழ்தலிற் பேரவாவுடையார் சிலர் புத்தியின்மையாலே தமது புகழைத் தாமே எடுத்துக் கூறுவர். தம்மைத்தாமே புகழ்ந்துரைத்தல் விளக்குப் பிரகாசித்தலை விரும்பி நீர் விடுதலை நிகர்க்கும் என்று மேலோர் கூறுவர். "தன்னை வியப்பான் தற்புகழ்தல் தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்த்தற்று" என்பது நீதிநெறி விளக்கம். தருமபுத்திரருடைய இராஜசூய யாகத்திலே சிசுபாலனுடைய தற்புகழ்ச்சியை மறுத்துச் சாத்தகி கூறிய வார்த்தைகளையும் இங்கே காட்டுதும்.

(தொடரும்)

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளை.

பெருந்தேவனார் பாரதம்

(43-ம் பக்கத் தொடர்ச்சி)

இடப்பால் கீழ்க்கையில் சுவடியும், இடப்பால் மேற்கையில் குண்டிகையும், வலப்பாற் கீழ்க்கையில் ஞானமுத்திரையும், வலப்பால் மேற்கையில் படிகமாலையும், அமைந்திருக்கும் எனவும், வீணை இடப்பால் மேற்றோளிற் சார்த்தப்பட்டிருக்குமெனவும் அறிக. "புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள் சேர் ஞான, வித்தகந்தரித்த செங்கைவிமலை" எனக் கவிச் சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் கூறியருளியதையும் ஈண்டு கவனிக்க. இடர்-துன்பம். நூலியற்றற்கண் நேரக்கூடிய இடையூறுகள் நூலியற்றப் புக்கார்க்குத் துன்பமாம்.—ஆகலின், அவ்விடையூறுகளையே ஈண்டிவ்வாசிரியர் துன்பம் எனக்குறித்தார் என்றறிக. அன்றி இடர் என்பதற்கு இடையூறுகள் என்றே பொருள் கோடலுமாம். இந்நூலை யான் இயற்றப் புக்கதும், கலைமகள் அக்கோலங்களோடு என் மனத்துக்கண் விரைந்துவந்து பொருந்தினாள். ஆதலின், யான் இந்நூலை இயற்றற்கண் இடையூறுகள் உளவாகா என்பது உறுதியாம் என்பார் "மார்பினுள் வந்தென் மனத்தே இடங்கொண்டாள் நீங்கிற்றிடர்" என்றார். இது தெளிவுபற்றி எதிர் காலத்தில் இறந்தகாலம் வந்தவழுவமைதி. இங்ஙனங்கூறினாரேனும் கலைமகளை அக்கோலங்களோடு என் மனத்தின் அமைத்துத் தியானித்து இந்நூலை இயற்றப் புக்கனன். ஆகலான், யான் இந்நூலினை இயற்றற்கண் இடையூறுகள் உளவாகா என்று துணிவுற்றனர். என்பதே இதன் கருத்தாம் என்று கொள்க. இச்செய்யுளின் நான்காமடியின் மூன்று சீரினும் மோனைத்தொடை அமைந்துள்ளது. இவ்வடியிலுள்ள சீர்கள் மூன்றினு மோனை அமைந்துள்ளதேனும் இதனை முற்றுமோனை என்னலாகாது. என்னெனின் இணைமோனை முதலிய தொடைவிகற்பங்கள் நாற்சீரடியையே நோக்கி நிற்றலானும், "ஈறிலி, கூழை" என்பதற்கு "ஈற்று சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கூழை" என்பதே பொருளாகலானும் என்பது.

திருமால் துதி.

மாலென்பதாம்பின்னை மால்வரையான் மால்விசும்பின்
மாலின்புயல்காத்த மால்வண்ணன்-மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
பேரோத மேனியான் பேர்.

(ப-ரை.) பின்னை-நப்பின்னைப் பிராட்டியினது, மால்-அன்பினை, வரையான்-நீக்காதவனும், மால்-பெரிய, விசும்பின்-விண்ணுலகத்தி லுள்ள, மால்-இந்திரனது, புயல்-மேகத்தை (மேகத்தினாற் சொரியப்பட்ட கல் மழையை), காத்த-தடுத்த, மால் வண்ணன்-எல்லா உயிர்களுக்கும் கைம்மாறு வேண்டாது (வுலகில்) மேகத்தை ஒத்த தன்மை யுடையவனும், மால்-(கேட்பார்க்கு) மயக்கத்தைச்செய்யும், அரவம்-ஓசையையுடைய பேர்-(அலைகளால்) அசைந்துகொண்டிருக்கும், ஓதம்-கடலைப்போன்ற, மேனியான்-(கருமையாகிய) நிறத்தினையுடையவனும்; பேர்-பெரிய, ஓது-(யாவராலும்) புகழப்படும், அநீர்-அந்தத் திருப்பாற்கடலை கடைந்தவனும், பேர் ஓத-(தன்) பேரைச் சொன்னால் அப்படிச் சொல்கின்றவர்களுக்கு, மேல்-(எவ்வுலகினும் உயர்ந்த) வீட்டுலகத்தை, ஈப்பான்-நீக்காதவனுமாகிய இறைவனுடைய, பேர்-திருப்பெயர், மாலென்பது ஆம்-திருமால் என்பது ஆகும். (எ-று.)

(வி-ரை.) பின்னை-நப்பின்னைப் பிராட்டியார். இவர் ஆய்க்குலத்தினர். இவரைக் கண்ணன் கொழுவிய எழுவிடைகளைத் தழுவி அவற்றின் வலியடக்கி அதன் பரிசாக மணந்து கொண்டனன். இவர் கண்ணன்றன் பட்டத்து மங்கையர் எண்மரில் ஒருவர்.

மாலின் என்பதில் இன், சாரியை. இடைச்சொல்லாதலின்னகரமெய்திரியா தாயிற்று. (நன்-மெய்-பு-இ-36 சூ) புயல்காத்த என்பது இரண்டன் தொகையாதலின் லகரமெய் பொது விதியால் திரியாது. இரண்டாம் புறநடைச் சூத்திரத்தில் (நன்-பு-இ-சூ-16) "விகாரத்தியல்பும்" என்றபடி இயல்பாயிற்று.

மால் வண்ணன் என்பதற்கு மேகம் போன்ற நிறத்தினை யுடையவன் என்று பொருள் கூறுதலுமாம் இதற்கு இப்பொருள் கொண்டால் மாலரவப் பேரோத மேனியான் என்பதை, பேர் ஓதம் மால் அரவம் மேனியான் என இயைத்து (அலைகளால்) அசைகின்ற கடலில் அச்சத்தைச் செய்யும் (ஆதிசேடனாகிய) பாம்பின் கண் (கிடந்த திருக்கோலமாய்) இருக்கும் திருமேனியை யுடையவன் என்று பொருள் கொள்க.

அந்நீர் என்பது தொகுத்தலாய் அநீர் என்றாயிற்று.

மால்சொல் பலமுறைவந்து பொருள் வேறு படுதலால் சொற்பின் வருநிலையணியாம்.

பின் இரண்டடி யமகம். பேர் என்னுஞ் சொற்கள் நான்கனுள், முதலது பெயர் என்னும் முதனிலையின் அஃது ஓதம் என்பதனோடுகூடி வினைத்தொகையாயிற்று. இரண்டாவது பெருமை என்பதன் திரிபு. மூன்றாவதும், நான்காவதும் பெயர் என்பதன் மரூஉக்களே இம்மூன்றும் பெயர்ச்சொற்கள்.

இச் செய்யுளிலுள்ள கதைகள் மூன்றனுள் நப்பின்னைப் பிராட்டியாரின் திருமணச்சுருக்கம் முன்னே கூறப்பட்டது.

முதலாவது புயல்காத்த கதையாவது—இறைவன் கண்ணனாக திருவவதரித்து ஆயர்பாடியில் வளர்ந்து வருகையில் ஆயர்கள் வான் வழங்கற்பொருட்டு இந்திரனைவேண்டி அவனை ஆராதிக்க இன்னடிசில் அமைத்தனர். கண்ணன் அவ்வின்னடிசிலை இந்திரனுக் கிடாமல் தடுத்துக் கோவர்த்தனமலைக்கு இடுவித்துத் தானொரு தேவ உருவங்கொண்டவ்வடிசிலை அமுதுசெய் தருளினன். அதனைக் கண்ட வச்சிரபாணி புட்கலாவர்த்த முதலிய முகில் வழி ஆக்களும் ஆயர்களும் அழியும்படி கன்மழை பொழிவித்தனன். கண்ணன் அக்கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாக ஏந்தி ஆக்களையும் ஆயர்களையும் காத்தனன் என்பது.

இரண்டாவது கடல்கடைந்த கதையாவது—அண்டங்களுக் கப்புறத்தான வைகுண்டத்து எழுந்தருளி யிருக்குந் திருவருட் செல்வியாராகியபெரியபிராட்டியாருக்குத் திருத்தொண்டு புரிவாளொரு தேவமாதரசி அப்பிராட்டியார் உகந்தளித்தருளிய வளவியமாலை ஒன்றினை தன் கை வீணையின் யாத்துக் கொண்டு நான்முகன் உலகின் வழியாக வந்துகொண் டிருந்தனள். அங்கு அம் மங்கையர்க் கரசியைக் கண்டு பணிந்த துருவாச முனிவருக்கு அத்தேவி அம் மாலையை அளித்தனள். அம்முனிவர் அம்மாலையின் மேன்மையுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்டு தேவலோகத்துக்கு வந்தனர். அப்போது இந்திரன் தேவர்கள் புடைசூழ ஐராவதம் என்னும் வெள்ளையானை மீதமர்ந்து மிக்க சிறப்புடன் உலாப் போந்துகொண்டிருத்தலைக் கண்டு அம்முனிவர் தலைவர் அவனை வாழ்த்தி அவனுக்கு அம்மாலையை நீட்டினர். அவன் அதை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியின் கண் வைத்தனன். அவ்யானை அதனைத் துதிக்கையால் எடுத்துகீழிட்டுக்காலால் மிதித்து விட்டது. அதுகண்ட முனிவரர் கடுஞ்சினமுற்று "ஓ, இந்திரனே நினக்கு இச்செல்வம் எத்தேவதேவியின் திருவருளால் எய்தினவோ அத்தேவியின் மாலையாகும் இது. இதனை நீ சிறிது மதியாது இது புரிந்தனையாதலின் நின் செலவங்கள்யாவுங் கடலிற் கரந்தொழிக." என்று சபித்தனர். அங்ஙனமே அவன் செல்வங்கள் யாவு மறைந்தன. இந்திரன் மிகவும் வருந்தித் தன் செயல் கொடிதே யென்றுணர்ந்து தன் அறிவின்மைக்காகத் தன்னையே நொந்து தன்னை அடைந்தார் துயர் கெடுக்கும் ஈடுமெடுப்புமில் இறைவனலன்றி இத்துயர் நீங்குவதன்றென

உன்னி வைகுண்டமடைந்து இறைவனை வேண்டினன். இறைவன் செவியுற்று "சுரர்களோடும் அசுரர்களோடும் சென்று கடல் கடைக. நின் செல்வங்கள் எய்தும்" என்று பணித்தனன். அங்ஙனமே சுரர்களும், அசுரர்களும் சென்று மந்தர மலையை மத்தாக நட்டு, வாசுகியைக் கடை கயிறாகப் பூட்டிச் சுரர் ஒரு புறமும், அசுரர் ஒருபுறமுமாக இருந்து கடலைக் கடையத் தொடங்கி வலியற்றவராய் நிற்க இறைவன் தானே இரண்டு திருவுருவங்கள் கொண்டு சுரர்பக்கமும், அசுரர்பக்கமும் நின்று கடலைக்கடைந்து இந்திரனுக்கு அவனுடைய செல்வங்களை அளித்து அதனின் றோன்றி யருளிய பெரிய பிராட்டியார் வீற்றிருக்கத் தன் எழின்மிகு திருமார்பினை இடமாக்கி யருளினன் என்பதாம்.

சா. ர. கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

திருக்குறள் நாடகம்

மயிலை சீனி. கோவிந்தராஜன் அவர்கள் எழுதியது

களவியல் (80-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை:—(முகம் சிறிது மலர்ந்து) "உனக்கு ஒளிப்பதும் ஒன்று உண்டா? தோழ! நேற்று—ஒன்று—நடந்தது. அது—சிற்றிடைச்சிறுமான் விழிச்சியார் ஒருவரைக் கண்டேன். கண்டேனுக்கு, என்னுடைய உள்ளம், பள்ளத்துப் பாயும் வெள்ளம்போல ஓடி இவ்வகை ஆயிற்று!"

பா:—(நகைத்து) "ஆயிற்று? பெருந்தகாய்! உன் பெருமை என்ன?—ஆ! உன் குணங்கள் எங்கே குடிபோயிற்று?—செங்கண்மால் உலகத்துப் பேரின்பத்திற்கு நீ உரியவன் அல்லவோ? ஐயோ! இந்தச் சிற்றின்பத்திற்கு இவ்வாறு ஆதல் ஆகுமோ?—"

தலை:—(பெருமூச்சு எறிந்து) "ஏல! என்ன சொன்னாய்? அந்தச் செங்கண்மால் உலகம்—பேரின்பம், வருந்தாமல் பெறலாமோ? நமக்கு அது கிடைக்குமோ? நாமோ, ஐம்புலன்களையும் அடங்கலும் அனுபவிப்போர். விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்மேல் மென்துயில் கொள்வோர். இந்தத் துயில்போல அவ்வுலகமும் எளிதாக எய்தலாமோ? ஆகாது!—இந்த இன்பத்தை எல்லாம் இகழ வேண்டும்! யோகத்தாலும் தவத்தாலும் தேகம் வருந்தவேண்டும்! அப்பொழுதே அதை அடையலாம்!"—(இன்னும் ஒரு பொருள்) "ஏல! நமக்கும் பேரின்பமா? அதுவும் இப்பருவத்திலா? இப்பொழுது நாம் ஐம்புலன்களையும் அனுபவிக்கும் இல்லறத்தையும் உடையோம்! இளமைப் பருவத்தையும் உடையோம்! நமக்கு, நாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோளின்மேல் துயிலும் துயிலே இன்பம்! இந்தத் துயில் போல நீ சொல்லுகின்ற செங்கண்மால் உலகம் நமக்கு இனிதாகுமோ? ஆகாதே!"

பா:—"அப்படியானால், அதை விடு. நண்ப! உன்னால் காணப்பட்ட உருவம் எப்படிப்பட்டது? அதை எவ்விடத்தே கண்டாய்? சொல்லு."

தலை:—(முகம் மலர்ந்து) "ஏட! அவள் அழகை அத்தனையும் சொல்ல முடியுமா? முடியாது. ஆயினும் ஒருவாறு கேள். அவளுக்குத் தோள்கள், வேயைப்போல் உருண்டு திரண்டு ஒள்ளியதா யிருக்கும்! மேனியோ மாந்தளிர்போல் மாமை நிறமாகும்! பல்லு முத்தைப்போல ஒத்திருக்கும்! நறுநாற்றமே இயல்பாகிய நாற்றம்! ஆ! அவள் மையுண்ட கண்ணோ நெய்யுண்ட வேல்தான்! வேறென்ன

சொல்வேன்?—அவளைக் குறிஞ்சிப் பொழிலிடத்தே கண்டேன்" 1113.

பா:—"அன்ப! சற்றே நீ ஆற்றியிரு. நான் போய்க் கண்டு வருகின்றேன்"
—பெயர்கின்றான்.

அன்று யாமத்திலே, தலைமகன் குறித்த இடத்தை நோக்கிப் பாங்கன் சென்றான். சென்று, அவன் சொன்ன பொழிலையும் உருவத்தையும் கண்டான். கண்டு, அவற்றின் அழகினைப் புகழ்ந்துகொண்டே, தன்னை எதிர்பார்த்திருக்கும் தலைமகனிடம் திரும்பி வருகின்றான்

பா:—(தலைமகன் நேரே நின்று) "ஏடா! நீ குறித்த பொழிலில் போய்ப்பார்த்தேன். ஆ! அதன் மரகதக் கொடியும்—மாணிக்கப் பாறையும்—நிலவு மணலும்—நித்தில ஒளியும், என்ன அழகு! ஆம்! அது துறந்தாரையுங் கூட துறவு விடுக்கச்செய்யும்! அதில் நின்ற திருவுருவோ, என்ன சொல்வேன்?—அள்ளிக்கொள்ளும் பேரழகுடைய கொல்லிப் பாவையே! அவ்வளவும்கண்டு, ஆற்றிக்கொண்டு, இவ்விடம் வந்து, இதுவரையும் இருந்தாயே! ஏடா! உன் ஆண்மையே ஆண்மை! நான் அறியாமல் உன்னை இகழ்ந்தேன்!"

களம்:—குறிஞ்சியில் முன்னை நாள் கூடிய பொழில்.

கூத்தர்:—தலைமகன், தலைமகள்.

முந்திய நாள்போலப் பொழிலிடத்தே தலைமகள் வந்திருப்பதைப் பாங்கனால் கேட்டறிந்த தலைமகன் அவ்விடம் சென்றான். சென்று, அங்கே தனியளாய் நின்ற தலைமகளைத் தலைப்பட்டான். தலைப்பட்டும், அவள் உள்ளக் குறிப்பினை உணராமல், அவளைச் சார்தல் ஆகாமையால், அதை அறியவேண்டி அவளுடைய நலத்தைப் புனைந்து நவில்கின்றான்.

த-ன்:—"மாணிழாய்! இந்த நிலப்பூக்களைக் கண்டாயா? எப்படி நிமிர்ந்து நிற்கின்றன பார்!—ஐயோ! பாவம்! இவை காணும் தொழிலை உடையன அல்ல! உடையனவாயின், உன்னுடைய கண்களைக் காணக்கூடும். கண்டதும், "இவள் கண்ணழகை நாம் ஒவ்வேம்" என்று கருதி, அந்நாணத்தினால் தலை கவிழ்ந்து நிலம் நோக்கும்,—இவற்றிற்கு நாணும் இல்லை! காட்சியும் இல்லை. செம்மாந்து வானை நோக்கின, கண்டாயா? 1114.

இவ்வாறு தன்முன்னே நின்று தன் கண்ணின் நலத்தைத் தலைமகன் புகழக் கேட்ட தலைமகள் நாணங் கொண்டு, கையினால் தன் இரண்டு கண்ணையும் புதைத்தாள். புதைக்கவே, 'இனிச் சாரலாம்' என்று குழலைத் திருத்திக் கூட்டம் பெற்றான். பெற்றபின், அவளை ஆயத்தினுள்ளே அனுப்பிவிட்டு அவள், தன்னைக் காணாதே தான் அவளைக் காண்பதோர் இடத்தே நின்றான். நின்று, அவளால் தன் காமத்தீ வெளிப்படுதலினால், அத்தீயை அவள் தந்ததாகக் கருதி வியக்கின்றான்.

த-ன்:—"ஆ! இத்தீயை எங்கிருந்து பெற்றாள்? எனக்குத் தர இவள் எவ்விடம் பெற்றாள்? எந்த உலகத்திலிருந்தோ?—தன்னை அகன்றால், சுடுகின்றது! அணுகினால், குளிர்கின்றது! (கூடாத துன்பம், கூடிய இன்பம்) இவ்வகைத் தீயும் இவ்வுலகத்தில் உண்டா? இல்லையே! எனக்காக இதை எங்கிருந்து பெற்றாளோ?"
1104.

இவ்வாறு அவள்பிரிவு, தன்னை வருத்தும் வகையைச் சொல்லிக்கொண்டே பெயர்கின்றான்.

இப்பாங்கன் கூட்டம் நிகழாதாயின் இடந் தலைப்பாடு நிகழும்.

இரண்டாம் நாள்.

௨. இடந் தலைப்பாடு.

களம்:—குறிஞ்சியில் முன்னைநாள்கூடிய பொழில்

காலம்:—கூதிரில் ஒரு யாமம்

கூத்தர்:—தலைமகன், தலைமகள்.

'என்னே! நேற்று நான் இவளை எய்தியது தெய்வத்தானே! அத்தெய்வமே இன்றும் கைகொடுக்குமாயின் காண்பேன்' என எண்ணி, முன்னைநாள் தலைமகளைத் தலைப்பெய்த தனியிடம் நோக்கிச் சென்று, அவளைக் கண்ணுற்ற பொழிலிடம் போய்ப் புகுந்தான் தலை

மகன். புகுந்தானுக்கு அப்பொழில்பெரிதும் துணையாகி, தான் கொண்டிருந்த ஆற்றாமை தணிந்தான். என்னெனில், இனியவரோடு எதிர்ப்பட்ட இடம் கண்டதும் அவ் இனியவரைக் கண்டாலே போன்று இன்பம் பயப்பது இயற்கை அல்லவோ ? இது இருக்க.

தலைமகனும், முன்னை நாள்போலத் தன்னைத் தோழியர்பலரும் தொடர்ந்து வர, அப்பொழிலிடம் வந்து புகுந்தான். அங்கே தோழியர் எல்லாம் விளையாட்டு விருப்பினால் நீங்கி வேறு வேறிடம் சென்றார். செல்ல, தலைமகள் ஒருத்தியேஆயினள். ஆகி, "நேற்று 'நின்னைப் பிரியேன் ; பிரியினும் தரியேன்' என்று சொல்லிப்பிரிந்த என் அன்பர் எவ்வழி வருவாரோ ? " என நாற்புறமும் நோக்கி நின்றாள். அதுபொழுது தலைமகன் 'இவளைச் சார்தற்கு இதுவே சமயம் !' என்று அவளை நோக்கிச் சென்று சார்ந்து கூடினான். பின்னர் கூட்டத்தில் மகிழ்ந்து கூறுகின்றான்.

த-ன்:—" அணியிழாய் ! நோயும் நீயே ஆனாய் ! அந்நோய்க்குமருந்தும் நீயே ஆனாய் !—இரவெல்லாம் உன்னையே நினைந்துவருந்தினேன். அவ்வருத்தம் எந்த மருந்தாலும் எளிதாகத் தீரப் பெற்றேனா ? இதோ உன்னை இடம் தலைப்பட்டே தீர்ந்தேன் ! நேற்று நீ கொடுத்த பிணியை இன்று நீயே கெடுத்தாய் ! இது என்ன வியப்பு ! பிணியும் தானே ஆகி, அப்பிணியைத் தணிப்பதும் தானே ஆகும். ஒரு பொருளும் உலகத்தில் உண்டா? வாத முதலிய பிணிகளுக்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவா ? அல்லவே! அவற்றிற்கு மாறாகிய இயல்பை யுடையன அல்லவோ மருந்து? 1102.

—(அவள் நலம்புனைந்து உரைக்க வேண்டி, தன் நெஞ்சை நோக்கி) "நெஞ்சே ! உனக்கு என்ன அறிவு ? மலர்களைக் கண்டால் இன்னும் மயங்குகின்றாயே?—இவள் கண்களைக் காணுதபோது இவற்றோடு ஒருபுடை ஒக்கும் மலர்களைக்கண்டு மகிழ்ந்தாய்! இப்பொழுது இவள் கண்களின் நலம் முழுதும் நன்றாய்க் கண்டறிந்தாய் ! கண்டறிந்தும், தாமரை வேல் நீலமெல்லாம் இவள் கண்களை ஒக்குமென்று கருதலாமோ ? அப்பூக்கள், பலராலும் பார்க்கப்படுவன ! இவள் கண்களோ நான் ஒருவனே காணப் பெற்றன! சீ! இவற்றை அவை ஒக்குமோ ? "

இவ்வாறு தலைமகள் நலத்தைப் புனைந்து உரைத்து அவளிடம் தனக்குள்ள அன்பினை அறிவித்து, அவளை ஆயத்துள்ளே அனுப்பினான் தலைமகன். அவளும் நீங்கிச் செல்கின்றாள். அதுபோது தலைமகன், தன் காதலின் சிறப்பினைக் கட்டுரைக்கின்றான்.

த-ன்:—"என்கண்ணிலே கருமணியிலே உறையும் பாவாய் ! நீ அவ்விடம் விட்டு அகன்று வா! வாராவிட்டால், என்னால் விரும்பப்பட்ட இவளுக்கு— இந்தத் திருநுதல் உடையாளுக்கு,— இருக்க இடம் இல்லையாம்.—இவளை நான் காணுமலும் அமையேன்! இவள், புறத்தே, போகத் தக்கவளும் அல்ல ! என் கண்ணுள்ளே இருக்கத் தக்கவள்! இருக்குங்கால் உன்னோடு ஒருங்கு இருக்க இடம் போதுமா ? போதாது! ஆகையால், பாவாய்! உன்னைக் காட்டிலும் சிறந்தாள் இவள் ! இவளுக்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ அப்புறம் வா ! " 1123.

—பெயர்கின்றான்.

மூன்றாம் நாள்.

4. மதி உடம்பாடு.

களம்:—குறிஞ்சியில் ஒரு தினைப்புனம்.
காலம்:—கூதிரில் ஒரு பகல்.
கூத்தர்:—தலைமகன், தோழி, தலைமகள்.

கள்ள ஒழுக்கத்தைக்கையகலாத தலைமகன்பின்னும் தலைமகளைத் தலைப்பெய்ய வேண்டி, அதற்கு உதவியாகும்படி அவள் உயிர்த்தோழியை நாட நினைந்தான். நினைந்து, தினைப்புனத்திலே தோழியும் தலைமகளும் ஒருங்கிருந்த செவ்வி அறிந்து தன் கையில் தழையும் மாலையும் தாங்கி, அவ்விடம் சென்று நின்றான். (தொடரும்)

தனித் தமிழ்ப் பகுதி

அறியா வினா

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்." —கந்தபுராணம்.

மேற்கண்ட திருவருட் பாட்டுக்குப் பொருள் விளங்கவில்லை. ஐயமின்றிப் பொருளைத் தெள்ளிதி னுணருமாறு, பதவுரை, கருத்துரை, இன்றியமையா இலக்கணக் குறிப்புடன், நமது அருமந்தன்ன "கலா சிந்தாமணி" அடுத்த பகுதியில் வெளியிட வேண்டுவல்.

இ. முருகைய உபாத்தியாயர்.

நிலத்தின் தட்ப வெப்பங்களால் மொழிநடை மாறல்

உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சியைச் சொற்களால் நாம் வெளியிடுங்கால் நம்மைச் சுற்றியிருக்கும் பொருட்களின் வடிவத்தையும் தன்மையையும் அவற்றின் அழகையும் சிறப்பையும் வன்மையையும் மென்மையையும் எடுத்தாள வேண்டி யிருப்பதை நாம் யாவரு மறிவோம். ஒருவன் இறுகிய மனத்தனாயிருப்பதைக் கண்டு அவனைக் கல்நெஞ்சன் என்று கூறுகிறோம். அகத்தில் தோன்றிய இளகாமையை எடுத்துரைக்க கல்லின் வன்மை வந்துதவுகிறது. இங்ஙனமே, தெளிந்த அறிவு, கலங்கிய நெஞ்சம் என்று நாம் பேசும்பொழுதெல்லாம் தண்ணீர் தெளிந்திருப்பதையும், கலங்கி நிற்பதையும் மக்கள்மேலேற்றி யுரைக்கிறோம். அன்றியும், உயர்வு தாழ்வு, மேன்மை கீழ்மை முதலியவை நிலத்திலுள்ள மேடு பள்ள ஏற்றத்தாழ்ச்சிகளினின்றுந் தோன்றிய பண்புப் பெயர்களாம். ஆனால், இங்கு கூறியவை எல்லா நாடுகளுக்கும் மொழிகளுக்கும் பொதுவா யிருக்கும். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவை வேறுபடுவதில்லை. ஏனெனின், எஞ்ஞான்றினும் கல்லும் நீரும் தங்கள் தன்மை மாறுவதில்லை. நஞ்சுண்டவன் சாவான் என்பது எங்கும் உண்மையே.

இப்பொழுது சூட்டினாலுங் குளிர்ச்சியினாலும் மொழிகளில் வரும் வேற்றுமையைக் கவனிப்போம். ஆங்கில நூல்களில் தாய் தந்தையரும் மக்களும் நெருப்பருகே ஒன்றாகக்கூடி யுட்கார்ந்து பேசுவதைப் பற்றி அடிக்கடி படிக்கிறோம். குளிர்மிகுந்த நாடுகளில் நெருப்பின் வெப்பம் இனிமையைத் தரும். கடுங்கதிர் ஞாயிறு காயும் நம் நாட்டில் நெருப்பின் அண்மை வெறுப்பையே தரும். ஆதலின், ஐரோப்பியர் தீயின் இனிய வெப்பத்தைப்பற்றித் தங்கள் இலக்கியங்களில் மகிழ்ச்சியுடன் பேசுகின்றார்கள்; நாமோ அனலின்கொடுமையை எண்ணி அஞ்சுகிறோம். அவ்வாறே, நாம் நீர், நிழல், குளிர் முதலியவற்றைச் சிறப்பித்து எழுதுகிறோம். அவர்களோ வாடையையும் ஊதையையும் நினைந்து

நடுங்குகிறார்கள். நாம் நிலங்குளிர மழை வேண்டுமென்கிறோம்; அவர்கள், மூடுபனி நீங்க ஞாயிற்றின் வெளிச்சத்தை விரும்புகிறார்கள். மரத்தின் நிழல் நமக்குத் தேவை; மரத்தின் விறகு அவர்களுக்குத் தேவை. இவ்வாறு, முற்றும் முரண்பட்ட எண்ணங்களால ஒன்றிற்கொன்று பொருந்தாத சொற்றொடர்கள் அவரவர் மொழியில் ஒரேவிதமான கருத்தை வெளியிடலாயின. நம்முடைய விருப்பம் குளிர்ச்சியின்மேலும் அவர்களுடைய விருப்பம் வெயிலின்மேலும் செல்வதால் நமக்கினியவை அவர்களுக்கு இன்னாதவையும் அவர்களுக்கு ஒத்தவை நமக்கு ஒவ்வாதனவுமாகி அதற்கேற்ப மொழி மரபு கொண்டன.

இனியான் ஒருவனை நாம் கண்ணுறுங்கால் இவன் ஈரநெஞ்சன் என்று சொல்லுகிறோம். ஆங்கிலத்தில் ஏறக்குறைய அதேகருத்தை வெப்பநெஞ்சுடையவன் (He has a warm heart) என்பதால் வெளியிடுகிறார்கள். அவ்வாறே கதிரோன் ஒளியிற் காய்தல் (to be in the sunshine) இடுக்கன் இல்லாமையை அவர்களுக் குணர்த்த நிழலில் வசித்தல் நமக்கு நல்வாழ்வைக் குறிக்கிறது. நிழலிலிருத்தல் (to be in the shade) ஆங்கிலருக்கு இன்னாப் பொருளையே தரும். "என்பிலதனை வெயில்போலக் காயுமே —யன்பிலதனை யறம்" என்னுங் குறளால் நமக்கு விளங்கும். குளிர்ந்தமுகத்துடன் வரவேற்றான் என்பது நம்மவர்க்கு நன்மையின் வேறுபட்டதொன்றையும் காட்டாது; மேல் நாட்டார்க்கோ அது வெறுப்பை யளிக்கும். (a cold face) அன்றியும், மங்குற்றிரள்கள் மேலெழும்புவதைக் கண்டு நாம் உவப்புறுவோம். மங்குல் (clouds) என்ற சொல்லை ஐரோப்பியர்கள் துன்பம் என்ற பொருள்களில் வழங்குகிறார்கள். "மழைமுகம் காணாப்பயிரை" நாம் முகவாட்டத்தை விளக்க எடுத்துக்காட்டுகிறோம். அவர்களோ 'ஒளிமுகங் காணாச்செடியை அதற்கொப்பாக எடுக்கிறார்கள். ஆறுதல் அல்லது குட்டை இழத்தல் நன்றென்பதைக் கருதித் தமிழர் 'பசியாற்றல்' 'ஆறுவது (சினம்)' இளைப்பாறல் ஆகிய இவைபோன்ற சொற்களில் அதன் இன்பத்தை நுகரா நின்றார். மற்றவரோ தீ மூட்டுதலிலும் காயத்திற்சூடு உண்டாக்குவதிலும் அவ்வின்பத்தைக் கண்டார். இவ்வாறு வருவன இன்னும் பல.

நிற்க, வெப்பமுந் தட்பமும் பற்றி வந்த எண்ணங்களால் மக்களுக்குத் தக்கவையும் தகாதவையுந் தமிழில் வகையறுக்கப் படுதல் வியப்பைத் தருகின்றது. தீமையை யகற்றி நன்மையைச் செய்தல் மாந்தர் கடமையெனின் அத்தீமைதான் எத்தன்மைத்தென்று யாவருமுணர வேண்டியது பொறுப்பு. அங்ஙனம் ஆராயுங்கால்தீமை யென்பது கயமை, களவு, கல்லாமை, கள்ளுண்ணல், பொய், புறங்கூறுதல் என்று எண்ணப்புகின். அதற்கிறுதி காணுதல் அரிதாகலானும், பொய்யுங் களவும் சிற்சிலவிடத்து நன்மை பயத்தலானும் (இறையனா ரகப்பொருள் நூற்பயன் தெளிதலில் காண்க) பொதுவாக அதன் தன்மையை உயர்ந்தோர் சொல்லியே அமைத்துக் காட்டினர். தீமையெனினும் வெம்மை யெனினும் ஒக்கும். தீமை தீயினது தன்மை; வெம்மை, சூடு. வெம்மை யென்பதற்குச் சூடு என்னும் முதற் பொருளுடன் கொடுமை என்று கொள்பொருளு மிருத்தல்போல் தீமை என்பதற்குத் தீயின் தன்மையாகிய முதற் பொருளுடன் நன்மையின் நீங்கியது என்னும் கொள்பொருளுமுண்டு. தீயின் பண்பு சுடுதல்; இதுசாலவும இன்னாது. சுடுதலையொத்த ஓர் உணர்ச்சியை உண்டாக்குவது தீமை. ஒருவன் தீமை இயற்றும்போதெல்லாம் மற்றொருவனைச் சுடுகிறான். இத்தொழில் உள்ளத்தில் நிகழ்வது சொல்லாமலே பெறப்படும். ஆதலால், பிறர் நெஞ்சைச் சுட்டு அல்லது வாட்டி, கொளுத்தி அல்லது காய்ச்சி நோக வைக்குஞ் செயல், சொல், நினைவு மூன்றுந் தீமை என்பது பெற்றாம். (வரும்)

K. P. சந்தோஷம், B.A.

தொடரியையாமை விளக்கம்

(௮௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வா றெழுத்து நூல் (இலக்கணம்) முறையிருத்தலின், 'பெருமை' என்னும் எழுவாய், (பெருமிதம்) 'இன்மை, என்னும் வினைமுற்றைத் தொடர்ந்து பெருமைக் குணமாவது பெருமிதமில்லாதிருத்தல், எனத் தன்குணப் பொருடருதலின், அது எழுவாய்த் தொடராம்.

அதைத் திருப்பின், (பெருமிதம்) 'இன்மை' என்னும் வினைமுற்று, 'பெருமை' என்னும் எழுவாயைத் தொடர்ந்து; பெருமித மில்லாதிருத்தல் பெருமைக் குண மெனப் பொருடருதலின், அதுவினைமுற்றுத் தொடராம்.

அதுபோல்,

'சிறுமை' என்னும் எழுவாய் (பெருமிதம்) 'ஊர்ந்துவிடல்' என்னும் வினைமுற்றைத் தொடர்ந்து; சிறுமைக் குணமாவது பெருமித மடைதல் எனத் தற்குணப் பொருடருதலின், அது எழுவாய்த் தொடராம்.

அதைத் திருப்பின் (பெருமிதம்) 'ஊர்ந்துவிடல்' என்னும் வினைமுற்று 'சிறுமை' என்னும் எழுவாயைத் தொடர்ந்து; பெருமித மடைதல் சிறுமைக்குணம் எனப் பொருடருதலின், அது வினைமுற்றுத் தொடராம்.

இங்ஙன மாகலின், இவ்விரு சொன்முடிவுரைகளில் ஒவ்வொன்றிலும் எழுவாய்த் தொடரும், வினைமுற்றுத்தொடரும்; வினைமுற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முளியைந் திருத்தலறிக.

இதனாற் றிருவள்ளுவர் இவ்விரு சொன்முடி வுரைகளிலும் பெருமைக் குணம் இன்னது, சிறுமைக் குணம் இன்னதென அவற்றின் குணங்களை விளக்கினா ரென்பது நன்கு விளங்குகின்றது.

மேலே காட்டின இரண்டு சொன்முடிவுரைகளில் முதலாவதில் யாதோர் பாட மாறுபாடு மில்லாமையின் அதை விட்டனர் பரிமேலழகர். ஆதலின் நாமும் விடுத்தனம்.

இரண்டாவதில், ஈற்றுமொழி (ஊர்ந்து) 'விடும்' எனப் பாடமாயின்,

'சிறுமை' பெருமித மூர்ந்து விடும்;

என்பதை எழுவாய்த் தொடராகவும்.

'பெருமித மூர்ந்து விடுஞ் சிறுமை' என்பதை வினைமுற்றுத் தொடராகவுங் கொளல் வேண்டும்.

அங்ஙனங்கொள்ளின் சிறுமை பெருமிதமடையும் எனவும், பெருமிதமடையும் சிறுமை எனவுமாய், 'சிறுமை' எப்படிப் பட்டதென்று வினவினார்க்கு அதை யுணர்த்தாமல் அது பெருமித மூர்ந்துவிடும் என்று அதன்செய்கையை உணர்த்தியவா றாகின்றது.

என்போலவெனின்,

பாட்டென்ப தென்னென வினவினார்க்குப், 'பாட்டென்பது பாடல்' எனக் கூறாமல் 'பாட்டென்பது பாடும்' என விடை யிறுத்தல் போலும்.

ஆயின் இவற்றை இயைத்துப் பார்ப்பளவில்;

'பாட்டு பாடல்' 'பாடல் பாட்டு' எனவும்; 'ஆட்டம் ஆடல்' 'ஆடல் ஆட்டம்' எனவும், எழுவாய்த் தொடரும், முற்றுத் தொடரும்; முற்றுத் தொடரும், எழுவாய்த்தொடரும் தம் முளியைந் திருத்தல் காண்க.

அன்றிக், "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பதாலு மீதறியக் கிடக்கின்றது. எங்ஙனமெனின், 'கற்பு சொற்றிறம் பாமையும்' 'சொற்றிறம் பாமை கற்பும்' எனப்பட்டு இருவகைத் தொடர்களுந் தம்முளியைந் தமையால் 'கற்பு' இன்னதென்று விளக்கப்படுவது போல் 'விடும்' என்னும்முற்று இயையாமையால் 'சிறுமை' இன்னதென்று விளக்கப்படவில்லை என்பதையு முணர்க.

'பாட்டுபாடும்' 'பாடும் பாட்டு' எனவும், 'ஆட்டம் ஆடும்' 'ஆடும் ஆட்டம்' எனவும், எழுவாய்த் தொடரும், முற்றுத் தொடரும்; முற்றுத் தொடரும், எழுவாய்த் தொடரும் தம் முளியையாமையுங் காண்க.

ஆகலின், அவ் 'விடும்' என்னும் முற்றுச் சொல், எழுவாயான 'சிறுமை' யோடு தொடர்தலாகிய வினைமுற்றுத்

தொடரும், 'சிறுமை' எனும் எழுவாய் 'விடும்' என்னும் வினைமுற்றோடு தொடர்தலான எழுவாய்த் தொடரும் தம்மு ளியையாமையால், அது பாடமன்மை யுணர்க என்றார் பரிமேலழகர் என வறிக.

ஆயின், அவர் எழுவாய்த்தொடரும், முற்றுத் தொடருந் தம்முளியையாமை யின் என்னாது, முற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் எனப் பின்முன் னாகக் கூறின ரென்னெனின்; எழுவாய் யாதோர் மாறுபாட்டையு மடையா திருந்தும், அதை முற்றே மாற்ற நிற் கின்றதாதலின், அதன் பிழைபாட்டை யுன்னி அம் முற்றை முற்கொண்டு அங் ஙனங் கூறியதாம். முற்று திருத்தப் படின் எழுவாய்த் தொடர் தானே யினைந்து விடும் எனற் றங்கோள்.

மா. வடிவேலு முதலியார்.

'கோகழி' உண்மை

(சஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

1. குறிப்பறிதலில், நம்புனத்தின்கண் ஒருவர் பலகாலும் வாரா நின்றார் எனவும்; தோழி தான் அறியாதாள்போலத் தலைமகளோடு உசாவினுள் எனவும்;

2. மென்மொழியாற் கூறலில், நம் புனத்தை விட்டுப் போவதுஞ் செய்கின்றிலன் எனவும்; அறிகின்றிலேன் எனவும்;

விரவிக் கூறலில், ஒரு பெருந்தகை பேய் கண்டாற்போல் நின்றான் எனவும் கூறினமைக்கு மாறு மென்க. தலைவன் சேர்ந்தது தோழியிட மன்று; புனமே யெனவும், தோழி அறியாதாள் போலவே கூறினு ளெனவும் போதருகின்றமையால், ஈண்டும் புனம்போலும் 'வான்கழி' அல்லது 'ஆன்கழி' யையே தில்லை வானவன் எழுந்தருளி வந்தடைந்த இடமாகக் கொள்ளவேண்டும்.

அங்ஙனங் கொள்ளாமல் பேராசிரியர் தோழியை யிடமாகக் கொண்டது தவறாம்.

இஃதீவோர் மூவர்க்கும் இயல்பே எங்ஙனமெனின்;

"நூலுரைபோத காசிரியர் மூவரும்
முக்குணவசத்தான்முறைபிறழ்ந்தறைவரே."
"அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்."

என்னும் முறையா லென்க.

ஆகவே, 'வான்கழி' அல்லது 'ஆன்கழி' முக்காலத்தும் இவர் கூறிய சிவலோக மாகவேமாட்டாது. இதனைத் 'தான் ஒரு வடிவு கொண்டு வந்து பொருந்தி' என்பதும் வலியுறுத்து மென்க.

இனி; 'ஆண்ட' என்பதற்கு 'அரசாண்ட' என்று பொருள் கண்டார் கந்தசாமியார், அது 'குருமணி' என்ற பிற் சொற்றொடரானும்,

'ஈர்த் தென்னை யாட்கொண்ட'
'அந்தணனா யாண்டு கொண்டருளி'

என்கிற இவை

"கண்ணுத லான்றன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி, யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி, விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய், எண்ணிறந் தெல்லை யிலா தானேநின்பெருஞ்சீர், பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்"

எனவும்

"பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்றமெய்ச்சுடரே"

எனவும்,

"நிலந்தன்மேல்வந்தருளி நீள்கழல்கள்காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற்சிறந்த தயாவானே தத்துவனே"

எனவும், சிவபுராணத்திலும்;

"புவனியிற்சேவடி தீண்டினன்காண்க
சிவனெனயானுந் தேறினன்காண்க
அவனெனையாட்கொண் டருளினன்காண்க"

எனவும்,

"இன்றெனக் கெளி வந்தருளி [பொருள்
அழிதருமாக்கை யொழியச் செய்த வொண்
இன்றெனக்கெளி வந்திருந்தனன் போற்றி"

எனவும் திருவண்டப் பகுதியிலும்;

'அருபரத் தொருவ னவனியில்வந்து
குருபரனாகி யருளிய பெருமையை" எனவும்,
"என்னையு மொருவனாக்கி யிருங்கழற்
சென்னியில்வைத்த சேவகபோற்றி"

எனவும், போற்றித் திருவகவலிலும் பின்னரும் திருவாய் மலர்ந்திருக்கின்றமையால் மறுக்கப்பட்டவா றறிக.

(தொடரும்) மா. வடிவேலு முதலியார்.

மார்க்கண்டேயர்

கூத்து

(௯௧-ம் பக்கத் தொடர்ச்சி.)

அபிராமி:—ஆமாம் அம்மா முனிவர் வந்தால் எல்லா உண்மையும் தெரிந்துவிடும். நான் போய்வருகிறேனம்மா.

மருத்துவதி:—செய்.

(அபிராமி போதல் மிருகண்டேயர் நண்ணல்.)

மருத்துவதி:—தாங்கள் முகம் வாடியிருக்கிறதாகத் தோற்றுகிறதே ஏதனாலோ? உடம்பு நிலைமை மாறுபட்டதோ? (கைகாலலம்ப நீர்கொடுத்தல் மிருகண்டேயர் அலம்பிக்கொள்ளுதல் அவர்அமர மருத்துவதி அணைகொண்டிடல், அருந்த நீர் தரல், பக்கலிலிருந்து பீலி கொண்டு வீசல்.)

மிருகண்டேயர்:—மருத்துவதி அப்படியொன்றுமில்லை உடம்புக்கு. ஆனால் இந்திர அவைக்களஞ் சென்ற நான் ஆண்டு அவ்வவையில் நிகழ்ந்த பல பேச்சுகளுக்கு இடையில் எனக்குப் புதல்வர்ப் பேறில்லாமையாலே நான் செய்யும் நோன்பு முதலியன நமக்கு நன்மையைத் தரத்தக்கன வல்லவென்றும் அஃதோடு அமையாது நிரயத்து வீழ்ந்து துன்புறும் வாழ்க்கை வாய்க்குமென்றும் பேசினார்கள். அதனால் உள்ளம் நொந்து செய்வதினி யாது என்ற உள்ளக் கலக்கத்தோடு அங்கிருந்து எழுந்து வந்து சேரலானேன்.

மருத்துவதி:—என்னுயிர்த் துணைவரே என்னாலல்லவா தங்களுக்கு இந்த துன்பமும் உள்ளக் கலக்கமும். தீயளாகிய நான் தங்களுக்கு வாழ்க்கையில் நற்புதல்வர்ப் பேறு தருவதற்கு உரியளல்லளாயமைந்த குறையால் அன்றோ தாங்கள் இத்துயர் கொள்ள நேர்ந்தது. புதல்வரைப் பெறுதல், விருந்தோம்பல் முதலியன இல்லாட்களுக்கு அமைந்த ஏற்பாடுகளாயிருக்க அப்புதல்வரை யீன்றெடுக்காதவளாய்த் தங்களுக்கு இடையூறாய் நானமைந்து கிடப்பதனாலே பொதுவாக வாழ்க்கைத் துணைவியர் என்று வளம்படக் கூறப்பட்டிருக்கும் மாதர்களில் நானொருத்தி தகுதி பெறாது கிடக்க நேர்ந்திருக்கிறதே யென் செய்வேன்!

மிருகண்டேயர்:—வீணாகக் கவலைகொள்ளாதே மருத்துவதி! என்ன செய்யலாம்! உன்னை நீ நொந்துகொள்வதினால் மட்டும் பயனொரு சிறிதுமில்லை. எனது தீவினையும் சேர்ந்து தான் நம்மைக் குறைவுற்ற வாழ்க்கையைக் கடத்த அமைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணியெண்ணியேக்கங்கொண்டிருப்பதைக்காட்டினும் இனி செய்வகை யாதெனத் தேறித் தெளிந்து உற்ற காலத்தே உரியதொன்றை யுறுதி யுறச் செய்து முடித்து நம் அல்லல்தீர்ந்து ஆம்வழி மகிழ்வுற வேண்டும். ஆதலின் மடந்தாய்! நான் அறைவதொன்றைக் கேள். உள்ளத்துற்று உன்னிப் போற்றி நோற்பார்தம் ஊறு களையும் உம்பர்கட்கரசாம் உமையார் தலைவரை நோக்கிச் செம்மை சேர் நோன்பாற்றி யவனருள் சுரக்க வேண்டியமைந்தவோர் மகப்பேறு அருள் பெற்று இவணுற்று இன்புற்று இனிதுறைய வென் நெஞ்சத்தே நினைந்தேன். இன்று நின்பால் என்னுளங் கிடந்ததை நவின்றேன். ஆதலின் உன் கருத்தை நவிலுதி.

மருத்துவதி:—அடைதற்கரிய அப்பெருஞ் செல்வத்தை யடைதற்குரிய நெறியைத் தவறாது பற்றி யாற்றிப் பயனுறும் உள்ளத்திட்பம் அமையப் பெற்றவரும் என்னுளத்தும் புறத்

தும் விட்டுப் பிரியாது எனக்கு எம்மையினும் இன்பம் விளைக்கும் இனியாருமாகிய தங்கள் கருத்துப்போல் முடியும் என்பதில் ஐயமே யில்லை. அதற்கேற்றபடியே சிறிதுநேரத்துக்குமுன் இங்கு வந்திருந்த மருளாட்டியாகிய ஓர் குறத்தியும் தோன்றி நோன்பாற்றி அதனால் மகப்பேறு கிடைத்தும் அம்மகவால் சீர்த்தியையும் இனிமையையும் அடைவீர்கள் என்றுசொல்லிப்போயினள். அவள் வருவதற்கு முன்னதாக இரு அரமகளிர் இங்கு வந்து பசிக்கு அடிசில் அளிக்கும்படி கேட்டார்கள். நன்னயத்தோடு பணிந்து இட்டேன், உனது கணவனுர் எங்கே, மக்கள் எங்கே என்றுர்கள். தாங்கள் சென்றமையையும் மகப்பேறில்லாமையையும் கூறி நின்றேன். மகப்பேறில்லாதவர் தீவினையாளர் அவர் அடிசில் தீயது என்று புறக்கணித்துப் பெயர்ந்து சென்றுர்கள். அதனால் வாடி துன்புற்றிருந்த நான் பின் வந்த மருளாட்டியின் தெருளுற்ற குறி மொழியால் ஒருவாறு தேறி யிருந்தேன். தாங்கள் உள்ளக் கலக்கத்தோடு வருவீர்கள் என்று அவள் கூறியபடி தங்களைக் கண்டேன். அவள் மொழியில் சிறிது நம்பிக்கை கொண்டேன். இறுதியாகத் தாங்கள் தேர்ந்து கூறிய இனிய நெறியாம் மகப்பேறும் உளவைக் கேட்டறிந்ததனால் அவள்அறைந்தன யாவும் ஆகும் என்னும் உறுதி கொண்டேன். என் உயிர்த் தலைவரே தாங்கள் உன்னியதொன்று முற்று பெற்று நம் உள்ளத் துன்பை யகற்றுவிக்கும். அங்ஙனமே நோன்பாற்றி அம்மை யப்பரைக் கண்டு களித்து அருள்தரப் பெற்று வாருங்கள்.

மிருகண்டேயர்:—நடந்தனவற்றுல் எனக்கும் நன்னம்பிக்கை யுண்டாகிறது. நான் காசி யடைந்து அதனணித்தாயுள்ள காட்டில் நோன்பாற்றி யருள் பெற்றுத் திரும்புகின்றேன். நீ யிங்கிருந்து செய்கடனை நிறைவேற்றிக் கொண்டிரு. செல்கின்றேன்.

மருத்துவதி:—மூரனுண்டு செல்லுங்கள்.
(அடிசில் கொள்ள செல்தல்.)

உறுப்பு-ச. களம் ங.

(மிருகண்டேயர் காசிக் கடுத்த ஓர் காட்டில் சிவபெருமானை நினைத்து நின்றபடியே நோற்றிருத்தல். அவ்வழியே நாரதர் செல்லல்.)

நாரதர்:—நாம் நினைத்தபடியே முடிகிறதெதுவும். அன்று இந்திர அவையில் புதல்வர்ப்பேறு பெருதார் உயர்நிலை யடைவது அரிது என்றும் நிரயமே அவருறும் நிலையென்றும் நிகழ்ந்த பேச்சுகளால் மிருகண்டேயர் அவ்வவைக்களம் விட்டு மெல்லென நழுவலானுர். அதைக் கண்டோம். புதல்வரைப் பெறுதற்குரிய வழியில் முயல்வாரென்றும் அவ்வழி கங்கை சூடிய கடவுளரைக் குறித்து நோன்பாற்றலே யென்றும் எண்ணினேம். எண்ணியாங்கே யிவர் இப்போது இக்காசியாம் தூய களத்துக் கணித்தாய இக்கானில் ஐம்புலனுடுக்கி கடு நோன்பு புரிகிருர். என்றும் அம்மையப்பன் அடி மறவா நெறியாளராமிவர்தம் சேய் வறுமையைக் களைந்து இவர் சீர்நிலை பெறுவான் நாம் உடனிருந்து உற்ற துணை புரிவது காலத்தாற் செய்த நன்றியாகும். ஆகவே யிப்பொழுதே சிவமலை சார்ந்து வேண்டுதல் வேண்டாமையிலான் முன்னிலையில் இவரது செயலைக் கூறி யிவர்மாட்டு இறையனுருக்கு இரக்கமுண்டாகி யின்னருள் புரியுமாறு தூண்டி விடுவோம், நமக்கு இதைவிட வேறென்ன வேலை யிருக்கிறது! நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டியவற்றுள் ஏற்பட்ட நிகழ்வுகளைக் காலந் தாழாது கவின்பெறச் செய்வதே நம்மை யொத்தார் செய்கடனும். செல்வோம் சிவன்பால். புகல்வோம் முனிநிலை. முயல்வோம் முதல்வன் அருள் சுரக்க.

நாராயண, நாராயண, நாராயண
(செல்தல். மிருகண்டேயர் கண்களைத் திறந்து கைகளை யேந்தி கூறுதல்.)

பாட்டு.

(விருத்தம்.)

"குழைத்தால் பண்டைக்
கொடுவினை நோய்காவாய்
உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி
யுண்டோதான் உமையாள்
கணவா யெனையாள்வாய்
பிழைத்தால் பொறுக்க
வேண்டாவோ பிறைசேர்
சடையாய் முறையோவென்
றழைத்தால் அருளா
தொழிவதே யம்மானே
உன்னடி யேற்கே." (க)

"அடியேன் அல்லல் எல்லாம் முன் அகல ஆண்டாய் என்றிருந்தேன், கொடியேரிடையாள் கூறா எங்கோவே ஆவா வென்றருளிச், செடிசேர் உடலைச் சிதையாத தெத்துக்கெங்கள் சிவலோகா, உடை கூவிப் பணி கொள்ளாது ஒறுத்தால் ஒன்றும்போதுமே." (உ)

அம்மையப்பா அடியேனிழைத்த கொடுவினைப் பயனாகக் கொடுநரகில்வீழ்ந்தலையாவாறு என்னைக் காக்கக் கடவியவன் நீயேயன்றோ. முன்னைப்பழவினை வலியால்வந்த விப்புன்மையைத்தவிர்த்தாண்டென்னைப் புன்னரகு புகா வழிசெய்வாயென்றும் இது முறையோ வென்றும் முறையிட்டும் என்னையின்றும் காத்தருளாது கவலைக் காட்படுத்தல் தகுதியோ,

பாட்டு.

(விருத்தம்.)

"அழுகேபுரிந்திட் டடிநாயேன்
அரற்றுகின்றேன் உடையானே
திகழாநின்ற திருமேனிகாட்டி
யென்னைப் பணிகொள்வாய்
புகழேபெரிய பதமெனக்குப்
புராணம்நீதந் தருளாதே
குழகாகோல மறையோனே
கோனே யென்னைக் குழைத்தாயே."

"மானேர்பங்கா! வந்திப்பார்
மதுரக்கனியே! மனநெகா
நானேர்தோளாச் சுரையொத்தால்
நம்பியித்தால் வாழ்ந்தாயே
ஊனேபுகுந்த உனையுணர்ந்தே
யுருகிப்பெருகும் உள்ளத்தைக்
கோனேயருளுங் காலந்தான்
கொடியேற்கென்றோ கூடுவதே." (௪)

அருள் வள்ளலே அடிமையின் அரற்றல் தம் திருச் செவிக்கு எட்டவில்லையோ என்செயலாலாவது இனியொன்றுமில்லை ஏழை பங்காளா.

பாட்டு.

(விருத்தம்)

"அன்றேயென்ற னாவியும்உடலும்
உடைமை யெல்லாமும்
குன்றேயனையாய்! எனையாட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டோ
எண்தோள்முக்கண் எம்மானே!
நன்றேசெய்வாய் பிழைசெய்வாய்
நானோஇதற்கு, நாயகமே!" (ரு)

எல்லாம் உன் பொறுப்பே. (மிருகண்டேயர் கண்மூடிய பாவைபோல அசைவற்று நிற்றல். பேரொளி வீசல். சிவம் தோன்றல். முனிவர் கைகூப்பிய வண்ணம் சுற்றி வந்து பணிதல்.)

பாட்டு.

(விருத்தம்.)

கண்ணோர் நுதலோய்! கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும்பகலும் நானிவையே
யெண்ணும் அதுஅல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன்கழற்கே புகுமாறும்
அண்ணா! எண்ணக் கடவேனோ
அடிமைசால அழகுடைத்தே!" (௬)

"எய்த்தேன் நாயேன் இனியிங்
கிருக்ககில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர்அறியா
மலர்ச்சே வடியானே!
முத்தா! உன்றன் முகவொளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா! சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே!" (எ)

அடியவர்க் கருளும் அருள் வெள்ளக் கடலே, அரவணி யிறைவா, அம்பலத் தாடியே, அரும்பொன்னே, மணியே, முத்தே, ஆரிருள் இரிந்திட அருளும் தெருளாளா, வல்லி மணவாளா, அடிமை யுய்யுமா றிரங்கும் ஏழை பங்காளா சீரடி பரவி என் சென்னிமிசை யணிகின்றேன் (சிவனடியில் தலைசேர்த்துப் பணிந்தெழுதல்.)

சிவம்:—அன்பனே, உன் உள்ளத்து உள்ள விழைவுயாது? எதை விரும்பி யிங்கோன்பினையாற்றினாய்? அறைகுதி அருள்கின்றோம்.

மிருகண்டேயர்,—முதல்வா முழு மணியே இறைவா.

பாட்டு.

(விருத்தம்.)

"வேண்டத்தக்க தறிவோய்நீ
வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டும்அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டியென்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தாய்
யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும்பரிசுஒன் றுண்டென்னில்
அதுவுமுன்றன் விருப்பன்றே." (அ)

(மணிமொழி)

எந்தாய் நான் மகப்பேறு பெறுக் குறைகொண்டு தீ நரகுக்காளா யிருக்கின்றேனே என் சிறுமை நீக்கியாளும் தே தாமேயன்றோ, தண்ணருள் புரியச் சார்ந்து பணிகின்றேன்.

சிவம்:—அங்ஙனமே யருள்கின்றோம். ஆபின் நீ விரும்பும் புதல்வர்ப்பேறு:

பாட்டு.

(விருத்தம்.)

"தீங்குறுபண்பே மிக்கச்
சிறிதும்மெய் யுணர்விலாமல்
மூங்கையும் வெதிருமாகி
முடமுமாய் விழியுமின்றி
ஓங்கிய ஆண்டுநூறும்
உறுபிணி யுழப்போனாகி
ஈங்கொரு புதல்வன்தன்னை
யீதுமோ கூறாய்நீயே." (க)

"கோலமெய் வனப்புமிக்குக்
குறைவிலா வடிவமெய்தி
ஏனுறு பிணிகளின்றி
யெமக்கும்அன் புடையோனாகிக்
காலம்எண் ணிரண்டேபெற்றுக்
கலைபல பயின்றுவல்ல
பாலனும் ஆண்மகவை
யருளுதுமோ பகர்தியின்னே." (உ)

தீயனாய், மூடனாய், முடவனாய்ச் செவி விழி முதலிய உறுப்பு குறையுற்றோனாய் பிணியோனாய் அமையும் புதல்வனாக நூறாண்டு வாழ்வை யுடையவனாய மகவு வேண்டுமா? அன்றி அழகெலாந் திரண்டு பிணியின்றி கல்வி யறிவார்ந்தவனா யெம்மிடத்தும் அன்புடையவனாய்ப் பதினாறாண்டே வயதுடைய மகவாக வேண்டுமா கூறாய்.

மிருகண்டேயர். பாட்டு.

(விருத்தம்.)

"மாண்தகு மலையின்மேலாய்
வாழுறும் கடவுளே! தாம்
ஆண்டவை குறுகினாலும்
அறிவுள னாகியாக்கைக்
கீண்டொரு தவறுமின்றி
யெம்பிரா னின்பால்அன்பு
பூண்டதோர் புதல்வன்தானே
வேண்டினன் புரிகநன்றே." (௩)

(கந்தபுராணம்)

ஐயனே குறையுற்ற உடலினையுடையவன் நூறாண்டுள்ளோனாயினும் செத்தாருள் வைத்து எண்ணற்கு உரியவனே. அவ்வகை புதல்வனை வேண்ட விருப்பமில்லை. ஆறணி கடவுள்தம் மிடத்து அன்புடையவனும் அறிவுடையவனும் ஆயசெய் எண்ணிரண்டாண்டே யுடையவனாயினும் அஃதே வேண்ட என்னுளம் ஒருப்படுகின்றது. ஆதலின் திருவருள் சுரகக விரும்புகின்றேன் இறையே.

சிவம்:—அங்ஙனமே அருளினோம் இனிது உய்யக் கடவாய்.

(மறைதல்)

மிருகண்டேயர்:—ஆ சிவமே அருமறை யிறைவா குறையை நிறைவாக்கிய குன்றமே.

பாட்டு.

(கலிவிருத்தம்.)

"மண்ணதனில் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி
யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்மகவே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.

(மணிமொழி.)

(செல்தல்.)

உறுப்பு-௧. களம்-௪.

(மிருகண்டேயர் தமது குடிலின்முன் முற்றம் அடைதல். அவர் வரவாலாய அரவ முணர்ந்த மருத்துவதியார் இருக்கையிட்டு அருந்தப் பாலுணவு தரல். முனிவர் பெற்று அருந்தல். தலைவி பீலிகொண்டு மெல்லெலன மாருதந் தோன்ற வீசல்.)

மருத்துவதி:—ஆர்வலரே, அல்லலொழிய ஆறுண்டானதா? நாம் ஆறுதல் பெறுவோமா? அம்மை யப்பரைக் கண்ணாரக் கண்டு செவியார அவர் அருள்பருகித் தங்கள்உள்ளம்பொங்க உவகை பெற்றீர்களா? ஓர் ஆண்டு காறும் ஒரு முதலை நோக்கி உறு நோன்பாற்றியதனால் உடலம் துரும்பாயானதே. ஆயின் கண்ணுதற் கடவுளை விழியாரப் பார்த்து விளைந்த மகிழ்வால் முகத்திலும் உடம்பிலும் ஒளிபரந்து விளங்குகிறது. என் உள்ளங் கவர்ந்த ஒரு முதல்வா தாங்கள் சென்று வந்த திறத்தின் வகை யறிவிக்க வேண்டுகிறேன்.

மிருகண்டேயர்:—ஆருயிரே, நான் சென்று காசி மணிகர்ணைகைத்துறையிலிழிந்து கங்கையில் மூழ்கி எல்லாம் வல்ல இறைவனையும் படர்விழி யம்மையையும் வணங்கி வழுத்தி அடுத்த கானில் இருந்து நோன்பாற்றினேன். இறைவன் எழுந்தருளினான். நானோ வலம்போந்து பணிந்து போற்றினேன். ஐயன் மகிழ்ந்து அன்பா உனக்கு ஆகவேண்டுவது யாது என்றார். மகப்பேறு அருள வேண்டும் என்றேன். குருடு செவிடு முடம் முதலிய உறுப்புக் குறையுற்ற மகவுவேண்டின் ஒரு நூறாண்டு உயிருடனிருக்கும். கலை பயிலறிவும் கடவுளிடத் தன்பும், பண்பும் பெற்ற புதல்வனாயின் பதினாறாண்டே பாரில் வாழ்வான் என்றார். உறுப்புக் குறையுற்ற மகவு வேண்டிலேன் ஒரு நூறாண் டிருப்பினும் இறந்தாருள் வைத்து எண்ணப்படுபவனே. ஆதலின் அண்ணலே அன்பும் பண்பும் அருங்கலை யறிவும் ஆர்ந்த அருமருந்தனைய ஓர் செல்வனே சாலும். அன்னான் எண்ணிரண்டாண்டு ஏதமற்றிருப்பினும் போதும் இஃதே வேண்டும். அருளவேண்டுகின்றேன். என்றிரந்தேன். வாழ்ந்திட வருளி மறைந்தனன் வானில். எழுந்தேன் ஈங்கு. உளமெலிவற்று மகிழ்வது கொண்டு இருக்கலாம் இனி. இனியாளே.

மருத்துவதி:—இன்னுயிர்த் தலைவரே, என்னுள்ளத்தும் இருந்த வேட்கை யதுவே. எழிலும், அறிவும், இருமுது குரவரிடத்தும் இறையவனிடத்தும் அடியாரிடத்தும் ஏதமற்ற அன்பும், பணிவும், பண்புமுடைய செல்வனா யமைந்து கிடைப்பது தாங்களும் தங்கள் மூதாதையரும் இழைத்த இனிய வினையே. வயது நிறைவுற்ற சேயாய் வாய்ப்பின் நல்லதே. அப்படியில்லையாய்க்குழவிப்பேறே அமையாது கொடுவினையாளரா யிருந்து கழிவதினும் சில பகற்போதேனும் இருந்து நம்முளத்தைக் களிப்பிக்கும் ஓர் சேய் நால்நான காண்டு வாழ்வுடனிருக்சப் பெறுவது நலமே. அஃது எனக்கும் மகிழ்வே. நீராடி இறையவனைத் தொழுது வாருங்கள். அரும்பசிக் கடிசிலுண்டு ஆறுவீர்கள்.

மிருகண்டேயர்:—அப்படியே அன்புடையாளே.

(போதல்)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்.

உறுதியின் உரம்

அல்லது

மாது சொன்ன சூளால் இளமை துறத்தல்

இஃதோ ருண்மைப் புதுவது புனைவு

காப்பு-நேரிசை வெண்பா.

* நீலகண்டன் சூளை
 நினைந்தொதுங்கி வாழ்ந்திட்ட
நீலகண்டன் நேர்மை
 நிகழ்த்தவே—பாலசனும்
ஆறுதலை வேலவ ! நின்
 அண்ணலெனும் ஆனைமுக
வீறுதலை ஐங்கரன்தாள் வீடு.

நூல்.

முதலாவது இயல்.

"பிறன் பொருளாள் பெட்டு
 ஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம் பொருள் கண்டார்க்கண் இல்."
 (திருக்குறள்)

"ஆ ! செம்பொன்னொளி மெய்யா ! சிற்றம்பலவாணா ! தில்லையிற் கூத்திடுஞ் சேயே ! இஃதென் ? ஊழி வேலையோ ? முன்னிரவாகிய இவ்வேளை, நள்ளிரவுபோல் நடக்கின்றதே !

"நாளென ஒன்றுபோற் காட்டி,
 உயிர், ஈரும் வாளது;
உணர்வார்ப் பெறின்."

என நாயனார் யாக்கை நிலையாமையைக் குறித்துக் கூறினாற்போல, இவ்விருண்ட எழிலியி னிடையே தோன்றுகின்ற மின்னலானது வழிகாட்டிபோல, ஒளி காட்டி யிருவிழிகளையும் ஈர்க்கின்றதே ! ஆ ! அந்தோ ! அஃதென் ? இடியேயோ ? அன்றி யிஞ்ஞால மிரண்டாய் வெடித்தபடியேயோ ?

ஏ ! மன்றவாணா ! விண்ணவர் திருப் பாற்கடலை கடைந்த பொழுது ** பொங்கியெழுந்த நஞ்சுபோல், காரினங்கள் கறுத்துப் பரவா நின்றனவே ! அன்று வானவர்களைக் காத்துத் தரித்த மணிமிடற்றோடு, இன்று சிறியேங்கட்குக் காட்சி கொடுக்கின்ற கடவுளே ! இப்போழ்து சிறியேனைக் காத்தருள்."

என்று கூறிக்கொண்டு "சோழவள" நாட்டில், பெரியோர்களால் 'கோயில்' என்று கொண்டாடப் பெற்றதும், மூவாயிரம் அந்தணர்கள் நிரம்பி யுள்ள

---

* இங்ஙனம் பெரிய எழுத்துக்களி லிணைக்கப் பெற்றுள்ளன, இவ்வரலாற்று முறைக்கு இன்றி யமையாத வட மொழிகளாம். இவ் விளைப்பை அறிவாளிகள் பொறுக்க.

** விண்ணவர் திருப்பாற் கடல் கடைந்த வரலாறு:—ஒருகால், விண்ணவர் சாகா மருந்துண்ண விரும்பித் திருமாலின் அருளால், பூமி தாழியாக மந்தரமலை மத்தாக, சந்திரன் தறியாக வாசுகி நாணாக, பாற்கடற் புனல், தயிராகப் பலவித பசிலைக ளிட்டு, ஆயிரமாண்டு கடைந்தனர். நாணாகிய வாசுகி துன்ப மிகுதியால், தனனிடத்துள்ள நஞ்சை யுமிழ்ந்தனன். அந்நஞ்சு அங்குள்ள யாவரையுந் தாக்கவே, யாவரும் வெருஉக் கொண்டு சிவபெருமானிடத்துச் சென்று முறையிட பெருமான் அருள் சுரந்து நஞ்சைப பருகி அவர்கள் வேண்டுகோளால் மிடற்றிற்கொண்டனர். அதன் பின்னர் யாதொரு ஊறுமின்றிக், கடலைக் கடைந்து அமிழ்தைப் பெற்றனர்.

தும், திருவருட் கடலாகிய அருமறை யிறைவன் உயிரினம் அனைத்துமுய்ய எப்பொழுதும் திருக்கூத்தினைத் தெவிட்டாத் தேனெனத் தந்தாட் கொள்ளுதற்கு இடமாயதும், நங் கொள்கையந் தலைவர் நால்வராலும் போற்றிப் புகழப் பெற்றதுமான தில்லையின், வடக்குத் தேர்த்தெருவில், இரவு முதல் யாமத்தில், கோடை வேனில் முதற் பெயல் மழைக்காக மங்குற் கூட்டங்கள் வானமெங்குஞ் சூழ்ந்து, இடித்துப் பெய்யத் தொடங்கிய மழைக்காலிருளில், ஒரு பெரியார் மெய்முழுதும் வெள்ளிய நீறு நிரம்பப் பெற்றவராய் உருத்திராக்கம், சிவலிங்கம் முதலிய கடவுட் பணிபூண்டு எம்பெருமானார் திருப்பெயர்களைப் பன்முறையுஞ் செப்பிக்கொண்டு மேற்கு நோக்கி விரைந்து செல்வாராயினர்.

மழையோ எளியரை வாட்டும் வலியரைப்போன்று மட மட வென்று வழங்கத் தொடங்கிற்று. உடனே, அப்பெரியார் கடவுட் பெயர்களை மீண்டும் விளம்பிக் கொண்டே கடிது நடந்தனர். "உழுகிறவன் ஏழையானால், எருது மச்சினன் கொண்டாடும்." என்ற பழமொழியைப்போல் அவர் விரைவிற்கேற்ப மழையும் பெருமாரியாயிற்று. ஆகவே, அவர் மழைத்துளிகளால் மிகவுந் தாக்கப்பெற்று, செல்லும் வழியுந் தெரியாது திகைத்து, உடைகள் யாவும் நனைய, என் செய்வோமென நாற்புறமும் நோக்கினர். அங்ஙனம் நோக்கிய வளவில் தனது வலக் கைப்புறத்தில் ஓரமாகிய சிறு வீடொன்று தென்பட்டது. அதனைக் கண்ட பெரியார் சிறிது மகிழ்ந்து அம் மனையை யணுகி யங்குள்ள திண்ணையிலேறி மதிலோரமாக நெருங்கி நின்றார். ஆயினுமென் ? ஒருவனுடைய பழைய வினை, அவன் எங்கு செல்லினும் அவனை விடாது பின் செல்வதுபோல், அங்கும் மழைத் துளிகளை காற்றால் வாரி யிறைக்கப்பெற்றார்; குளிரினால் காலுங் கையும் நடுங்கின; மயிர்கள் சிலிர்த்தன; உதடுகள் உதரலாயின. ஆகவே, பெரியாரும் செயலற்று அம்மனையின் மதிலில் சாய்ந்து ஒடுங்கி நின்று கொண்டிருந்தனர்.

இங்ஙனம் நின்று கொண்டிருக்கும் இப்பெரியாரே நமது வரலாற்றுத் தலைவராகிய திருநீலகண்டர் * என்று நண்பர்கள், நெஞ்சத்து நன்கு நிறுத்தக் கோருகின்றோம்.

இனி, நமது பெரியார் தங்கிய வீட்டைப்பற்றி யாராய்வாம்:—அஃதொரு தேவடியாள் வீடாம். அவள் பெயர் ஞானரத்தினம். அவள் அவ்வூர் அம்பலவாணனது திருமுன்னிலையில் நாள்தோறும் தவறாது சென்று திருக்கூத்தாடிச் செம்பெருமான் திருவருளையடைந்து செழுமையோடு அவ்வீட்டில் வாழ்ந்து வருகின்றாள்.

அம்மையப்பரினருளே அவள் ஆவல் கொள்ளும் பொருளாம். சிற்றம்பலமே அவள் மறுமையில் வாழ விரும்புஞ் சிறு வீடாம். பெரியோர்களின் உள்ளம் நோகாமல், அவர்கள் நோக்கமறிந்து செல்வதே அவட்குப் பேரின்பமாம். தமிழ் மறையினை யாழிலிட்டுப் பண்ணோடு பாடுவதே அவள் கையாளும் இசை நுணுக்கமாம்.

அவளுடைய மனை அவ்வளவு பெரிதாயிராவிட்டாலும் முகப்பில் இரண்டு சிறிய திண்ணைகளோடு தாழ்வாரம் வேயப்பெற்று வீதியில செல்கின்றவர்களுடைய கண்களையும், உள்ளங்களையும், உட்சென்று பார்க்கவேண்டு மென்னும் விருப்பத்தால் கொள்ளை கொள்ளும் பெருமையோடு கூடியது. உள்ளே தலைவாயிலைத் தாண்டிச் சென்றால், சிறிதகன்றழகிய வரவேற்கும் அறைதோன்றும். சற்று தலையை நிமிர்த்து மேலே நோக்கின், தேர்ந்த பல கொற்றர்களைக் கொண்டு பலவிதமான பூக்கள் பொதுளிய குளங்கள் போன்றும், நறு நாற்றமிக்க மலர்கள் மலிந்த பூந்தோட்டங்கள் போன்றும், மரங்களும் விலங்குகளும் நிறைந்த சிறைக் காடுகள் போன்றும் எழுதப் பெற்றுள்ள ஓவியங்கள் செறிந்த மேற்கட்டுத்தோன்றும். நாறபுறத்துச் சுவர்களும் செவ்விதாக வெண்

* இப்பெரியரின் வரலாறு, இறுதி இயலில் விளங்கும்.

சுண்ணந் தீற்றப் பெற்று கூத்தப் பெருமான் முதலிய பல வடிவ ஓவியங்களும், இவ்வுலகிற் றோன்றி யுய்யக் கொண்ட நங்கொள்கைத் தலைவர்கள் முதலிய பல பெரியார்களின் ஓவியங்களுமம நிரம்பப் பெற்றுள்ளனவாகும். முற்கூறிய மேற் கட்டி னின்றும் பல நிற விளக்குகள் தொடுக்கப் பெற்றனவாய் வரிசை யாய்த் தொங்கும். அவ்வரவேற்கும் அறையின் நடுவில் ஒரு பெரிய சலவை கல் திண்ணை யிடப்பெற்று அதன் சுற்றுப்புறங்களில் சிறிதும் பெரிதுமாய பல இருக்கைகள் காணப்படும்.

இன்னும் அதன் வலப்புறத்தை யொட்டி யிரண்டறைகளும், இடப்புறத்தை யொட்டி இரண்டறைகளுமம உள்ளன. அவற்றில், வலப்புறத்தினுள (வாசற் கடை யோரத்தினு)ள்ள முதலது உண்டாட் டறையாம். இரண்டாவது கிடங்கியாம். இடப்புறத்தி னுள்ள முதற் கண்ணது பள்ளி யறையாம். இரண்டாவது கடவுளை வணங்கும் அறையாம்.

இதன் பின்னர், சிறிய நடை வெளியும் அதனிருபுடைகளினும் இரண்டு சிறிய அறைகளுமுள. அந்நடை வெளி முன்னதாகிய வரவேற்கும் அறையைப் போல் அவ்வளவு வேலைப்பாடுள்ளதாகக் காணவிடினும் பார்ப்பதற்கு மிகவும் தூய்மையாகவும், பத்துப் பன்னிரண்டு மக்கள் உணவுட்கொள்ளற்குகந்ததாகவு முளது.

அத னிருபுடைகளினு முள்ள அறைகளுள் வலப்புறமுள்ளது மடைப்பள்ளியாம். இடப்புறமுள்ளது புனலாட் டறையாம். அதற்கப்புறஞ் செல்லின் ஓரழகிய நிலா முற்றமுளது. அது வேனில் வேளையில் விளையாடு மியல் புடையது. அதன் பினனர், பெரியாரின் உள்ளம்போல் ஆழ்ந்தகன்று தெளிந்த நீர்நிலை யொன்றுளது. அதன் நாற்புறமும் பலவித பூஞ்செடிகளும் பழமரங்களும் அடர்ந்த காவொன்று பரவியுள்ளது.

இத்தகைய மனையின் வலத்திண்ணையிற்றான் நமது பெரியார் மழையாலொடுங்கி நின்றுளார். இவர்க்கு இவ்வீட்டைப்பற்றியும், வீட்டி னுள்ளாரைப்பற்றியும் ஒரு சிறிதுந்தெரியாதென்பதும், நாம் முற்கண்ட சாப்பாட்டறைக்கும் இவர் நிற்குந் திண்ணைக்கும் இடையே இருப்பது ஒரே மதிலென்பதும், அம் மதிலில் அவர் நிற்கு மிடத்திற்கு நேரே ஒரு பலகணி உள்ளதென்பதும் வரலாற்று நண்பர்கள் வருத்துக் கொள்ள வேண்டுவனவாம்.

இங்ஙன மிவர் ஒடுங்கி நிற்குந் தறுவாயில் அவ்வீட்டிற்குடையாளாகிய ஞானரத்தினம் அவ்வறையில் உண வருந்தி, அதன்புறத்தி னுள்ளதும், நம்மால முன் குறிப்பிடப் பெற்றதுமான வரவேற்கும் அறையினுள்ள ஓரிருக்கையில் அமர்ந்து கொண்டு தன் வேலைக்காரியோடு பேசத் தொடங்கினாள்.

ஞா:—அடியே! சிவகாமி! இங்கே வா; விரைவில்.

உடனே ஒரு பெண் 'என்ன?' என்று எதிரே வந்தாள். அவள் தான் அவ்வீட்டு வேலைக்காரி. அவள் சிறிதுங் கள்ளங் கபடில்லாதவள். தலைவியின் விருப்பம்போல் வேலைகளை யெல்லாம் செய்து முடிப்பாள். ஆனால், கொஞ்சம் 'சோம்பல்' என்ற கெட்ட வொழுக்கம் மட்டும் அவள்பால் குடிகொண்டிருந்தது. அஃதாவது "எவ்வேலையும் எளிதா யிருக்க வேண்டும்; அல்லது, எளிதாய் முடிக்க வேண்டும்" என்று எண்ணுவதே.

ஞா:—அடியே! யார் உனக்கு இவ்வளவு பெரிய பெயரை "மொண்டு குடிக்க மொந்தையில்லாதனுக்கு பேரு, செம்பொன்னம்பலம்" என்ற வாறுபோல் வைத்தது?

சி:—ஆ! அம்மா! நான் என்ன செய்தேன்? யாதொன்றுஞ் செய்யவில்லையே!

ஞா:—நீ யொன்றுந் தவறவில்லை. சரி, சிவகாமி என்றால் என்ன பொருள்? சொல் பார்ப்போம்.

சி:—அம்மா! பொருளாவது? உருளாவது? எனக்கொன்றுந் தெரியாதே! ஆனால், ஒரு தடவை, நான் என் தாயா

ரைப் பார்த்து, "அம்மா! எதற்காக எனக்கு சிவகாமி என்று பெயர் வைத்திருக்கிறது?" என்று கேட்டேன். அதற்கவள், உன்னுடைய பாட்டியார் பெயர் அதுவாகும். ஆகையால் உனக்கப்படி வைத்திருக்கிறது" என்று சொன்னாள். அவ்வளவு தான் அம்மா! எனக்குத் தெரியும்.

ஞா!—ஆ! ஆ! மிகவும் நன்றாயிருக்கிறது ஞாலம்! இஃதிவ்வேலையின் கோலம் போலும்! சரி, அஃதிருக்கட்டும். இனிமேலாவது நான் சொல்வதைக் கேட்டுத் தெரிந்துகொள். என்னிடத்துச் சொன்னதைப்போல் யாரிடத்தும் பெயர்க்குப் பொருள் தெரியாதென்று சொல்லி நினது அறியாமையை வெளிப்படுத்தாதே.

வரலாற்று நண்பர்களே! நம் நாட்டில் கல்வி வளம்பொலியப் பெற்ற விப்பொழுதும் நமதிளைய நண்பர்களிற் பலர் தம் பெயரின் உளவு தெரியாதிருக்கின்றனர் என்ற நிகழ்ச்சியை நெஞ்சத்திறுத்த வேண்டுகின்றோம்.

சி:—தெரிந்துகொண்டபிறகு கூடவா தெரியாதெனச் செப்பிச் சிறுமையுறுவேன்? அம்மா! அப்படிச் செய்ய மாட்டேன். கூறுங்கள் தெரிந்து கொள்கின்றேன்.

ஞா:—நல்லது. கருத்தாய்க் கேள். 'சிவம்' என்றால், எல்லா நன்மைகளுக்கும் வித்தாகிய ஒப்பற்ற நமது தில்லையம்பலத்தில எழுந்தருளியுள்ள எம்பிரான். "காமி" என்றால், எப்பொழுதும் அஃதாவது இரவும், பகலும் அன்பு செலுத்தி வணங்கி அப்பிரானது அருளைப் பெறுபவள் என்று கொள்ள வேண்டும். கொள்ளவே, கடவுளை அல்லும் பகலும் அன்பு செலுத்திப் போற்றிப் புண்ணியத்தை யடைபவள் என்பதாம். என்ன? தெரிந்துகொண்டாயா?

சி:—ஆம்; அம்மா! தெரிந்து கொண்டேன்.

ஞா:—என்ன தெரிந்துகொண்டாய்?

சி:—பெயர்ப் பொருளை.

ஞா:—அதனோடு இன்னுமென்ன தெரிந்து கொண்டாய்?

சி:—கடவுளை எப்பொழுதும் வணங்க வேண்டுமென்றுந் தெரிந்துகொண்டேன். ஆனால், இன்னோர்ஐயம், நான் கடவுளை எபபொழுதும் வணங்கிக் கொண்டிருந்தால் எனக்குயார் உணவிடுவார்கள்? என்பது.

ஞா:—ஓ கோ! அல்ல! அல்ல! அப்படியல்ல; இவ்விடத்தில் வீடடைந்த நந்தனார் வரலாறு நீ கேட்டதில்லையா? அவர், தம்மை யாளாக்கொண்டான் வேலையை முடித்து விட்டுக் கடவுளை வணங்கிப் பெருமையுறவில்லையா? * உன்னை எப்பொழுது மிறைவனை வணங்கிக் கொண்டிருக்கச் சொல்லவில்லை. நீயோ வீட்டு வேலைகளை எவ்விதமாகவோ மிக விரைவில் முடித்து விடுகிறாய். அதைப்பற்றி யெனக்கு மிக்க உவகையே. ஆனால், வேலையின்றிச் சும்மாவிருக்கும்போது கடவுளை நினைத்தாலென்ன? அதைப்பற்றித் தான் இவ்வளவு பேசப் புகுந்தேன். சரி, நீ விரைவில் அந்த எச்சிற் கலங்களை விளக்கி வைத்துவிட்டு யாழை எடுத்து வா, எம்பிரான் புகழைப் பாடி மகிழ்வோம்.

சி:—அம்மா! அப்படியே செய்கிறேன்.

என்று சொல்லி விட்டுத் தனக்குள், தான் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்து முடிப்பதைப் பற்றித் தலைவி

---

* நந்தனார் வீடடைந்த வரலாறு.—இவர் சோணாட்டில், ஆதனூரில் புலையர் வகுப்பில் தோன்றி, கடவுள் மாட்டன்புடையாராய் கோயில்களிலுள்ள பேரிகை, முழவு முதலியவற்றிற்கு வார், தோல் முதலியன கொடுத்துதவி வந்ததோடு ஒருகால், தம்மையடிமை கொண்டிருந்த மறையோரிடத்தில், தில்லைக் காட்சி காண வேண்டி செல்வதற்கு விடை கேட்டனர். அதற்கவர், பலவிதமான வேலைகளைக் கொடுத்து இவற்றை முடித்து விட்டுப் போகலாமெனக் கூறினர். பெரியாரும் அவ்வேலைகளை யொப்புக்கொண்டு செய்யத் தொடங்கவே, அவைகள் எம்பிரான் அருளால் விரைவின் முடிந்தன பின் விடைபெற்றுச் சென்று தில்லை யந்தணர்களால் தூயராக்கப் பெற்று, எல்லாம்வல்லான் எழுந்தருள் காட்சியைக் கண்டு சிவத்துட் கலந்தனர்.

களிகொண்டதாக எண்ணிக் கொண்டு உண்டாட் டறைக்குட் சென்று எச்சிற் கலங்களை நீர் கொண்டு தூய்தாக்கி வேலையை சுருவாக முடிச்சக்கருதி அக் கலங்களி லுள்ள நீரை பெரிய கலத்திற் பெய்து வாயிற் புறத்துள்ள பலகணியின் கதவைத் திறந்து விசிறிக் கொட்டினாள்.

வேலைக்காரி, மழைககாலிருட்டினாலும், தன்னிடத்துள்ள 'சோம்பல்' என்ற தீய வொழுக்கத்தாலும் வேலையை விரைவில் முடிக்கிறோம் என்ற பெருமையாலும் வெளியே நின்ற பெரியாரைப் பார்க்கவில்லை.

அந்நீர், வெளியே நளிரினால் ஆடியொடுங்கி யுள்ள அப்பெரியார்மீது தாக்கவே, எரிகின்ற நெருப்பில் குங்கிலியத்தைப் பெய்தாற் போன்று நளிர் மிகப் பெற்று, அவர், "தில்லைத் திருக்கூத்தா ! தில்லைத் திருக்கூத்தா !" என வாய்வீட்டுக் கதறுவா ராயினர்.

(பின்னுந் தொடரப் பெறும்)

தொண்டர்தந் தொண்டன்,
வேலூர்.

குறிப்பு:—கலாசிந்தாமணி ௨ ஆம் பகுதியில் ௫௭ ஆம் பக்கம் ௨ ஆம் பத்தியின் ௨ ஆம் வரியிலுள்ள "துயி லுறுதற்கு" என்பதை "துயி லறுதற்கு' எனத் திருத்திப் படிக்க.

மாணவர் பக்கம்

தொடக்கக் கல்வி

[ஆரம்பக் கல்வி]

(௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

இளஞ்சிறார்க்கு இதுகாறும் எழுத்துப் பயிற்சி முதலாக எண்ணறிவு வரையில் இன்ப மமையும் முறையில் கற்பித்தலுக்காக வேண்டிய குறிப்புகளைவெளியிட்டோம். இனி சிறுவரை விளையாட்டுத் தோட்டத்துக் கழைத்துப்போய் அவர்கட்குத் தங்களிடமுள்ள ஐம்புலன்கள் வழியாக ஐம்பொறி வாயிலாக உணரும் உண்டு உயிர்த்துக் கண்டு கேட்டு உற்றறியும் பொருளுணர்ச்சியைக் கொண்டு உலகியலை யறிவித்து அதனால் உலகத்தோ டொத்து ஒழுகும் ஆற்றையும் ஒப்புர வொழுகு தலையுங் கற்பித்தல் இன்றி யமையாததாம். பிள்ளைகளை நோக்கி கற்பிப்போன் அஃகான் (அகர) எழுத்தைக்கொண்டு இயற்றும் (மாங்காய்) ஒவிய வடிவையெழுதுமாறு கூறல். காணும் ஒவியப் பொருளின் பெயர் என்ன ? மாங்காயைப் பார்த்தது உண்டா ? அது எதற்காகப் பயன் படுகிறது ? சுவை. அது வாய்க்கு எப்படி யிருக்கும் ? என்னும் வினாக்களால் படிப்படியாய்ப் புளிப்பா யிருக்கும் என்னும் விடைவரையில் வருவித்தும், கூடுமாயின், மாங்காய்களை காட்சியில் வைத்துக்கொண்டும் சின்னஞ் சிறு துண்டுகளாக்கி சிறுவர் ஒவ்வொருவரிடத்தும் தந்து வாயிலிட்டுச் சுவைக்குமாறு செய்யலாம். அது என்ன சுவையெனக் கேட்டு புளிப்புச் சுவையென விடை வருவித்து, இன்னும் இதேசுவையுடைய பொருள்கள் எவை யெனக் கேட்டு புளி, எலுமிச்சை, கிச்சிலி, மாதுளை, தயிர், மோர் முதலியவற்றை வந்தவரையில் விடை வருவித்தல். பின்னர், இனிப்பு கார்ப்பு உவர்ப்பு துவர்பபு கைப்பு முதலிய அறுசுவைகளைப்பற்றி அவற்றிற்குரிய பொருள்களைக்கொண்டும் ஒவியங்களைக் கொண்டும் அறிவித்தல். இவ்வழியாகவே பொருநிறம். ள்களின் வெண்மை, கருமை, செம்மை, பசுமை, மஞ்சள் முதலிய நிறங்களைப் பற்றிய அறிவை

விளைத்தலும், தொட்டு அறிதலாகிய வன்மை, மென்மை, வெம்மை, தண்மை முதலிய உற்றறியு முணர் வறிவை யவ்வப் பொருள்களால் ஆக்கலும் நலந்தரும். உலகப் பொருள்களை நுகர்தல் இவ்வைம்புல நெறியாலே ஐயறிவாலன்றி வேறன்றாமாதலின்.

உற்றுணர்வு.

பொருட் காட்சியால் விளக்கும் பொருட்பாட அறிவில் வீட்டில் வளர்க்கப்படும் உயிரினங்களைப் பற்றிய அறிவை ஒன்றொன்றாகச் சிறுவர் அறிந்தவற்றைக் கொண்டு அவர்கள் அறியாதனவற்றில் சிற்சில பகுதிகளையே யெழுத்து பயிலும் இவ் வகுப்பிற்குரிய பாடங்களாகக் கொண்டு கற்பித்தல் தகுதி. ஆதலின் முதன் முதலாக உயிரினங்களில் ஆவைப் பற்றிய அறிவை ஓர் ஆவை நேரிற் காட்டியேனும் அன்றேல் படத்தால் தெரிவித்தேனும் அதனைப் பற்றி யவர்களை அறிந்தவற்றை முன்னர் அவர்கள் வாயால் உரைக்கும்படி சிறு சிறு வினாக்களால விடைகளாக வருவித்தல் நலம். ஆவைப்பற்றி யறிவிப்பதில் அதன் தோற்றம், உண்ணும் உணவு, அதன் பயன் ஆகியவற்றை யவர்களால் வருவித்தல். ஆவின் பயனாகப் பாலை வருவிப்பதைக் கொண்டு பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் எடுக்கலாம் என வருவித்துப் பின் வெண்ணெயால் நெய் கிடைக்குமென்பதையும் வெண்ணெயை என்ன செய்தால் நெய்யாகும் எனக் கேட்டு அனலில் காட்டினால் உருகும் என்பதையும் வெண்ணெய் உருகும் இன்னும் என்னென்ன பொருள்கள் உருகும் என்பதால் படிப்படியாய்க் கற்பிப்போராது தூண்டுங் கேள்விகளாலும் உற்ற விடத்துச் செய்யும் துணைசொற்களாலும் மெழுகு, அரக்கு முதலியனவும் உருகும் என்பதையும் வருவித்தல்.

உயிரறிவு பசு.

நூலறிவு உருகுதல்.

சிறுவர்களை விளித்து வீட்டை நாளும் தூயதாக விருக்க என்ன செய்கிறார்கள்? என்பதால் அழுக்கைப் போக்கித் தூய்மை படுத்துகிறார்களென்னும் விடையை வருவித்து இதுபோல நாளும் மெய், வாய், விழி, கை, கால் முதலிய உறுப்புகளில் ஏற்படும் அழுக்கைப் போக்க என்ன செய்கிறோம்? என்பதால் பல் தேய்த்தல், கைகால் முகம் கழுவுதல், நீராடல் செய்கிறோம் என்னும் விடைகளை உற்றதுணையோடு வருவித்தும் இங்ஙனம் உறுப்புகளைத் தூய்மை படுத்தாவிட்டால் பிணியும் பிறர்க்கும் நமக்கும் அருவெறுப்பும் உண்டாகும் என்பதை யவர்களைக் கொண்டே விளங்க வைத்தும சிறுவர்களுக்கு அகான்வடிவ ஒவியத்தாலாம் மாங்காயை நினைப்பூட்டியும் சில மாவிலைகள், பிற செடிகள் வேரோடு கூடியன வாய்க் கொணர்ந்து இலை, கொம்பு, வேர் இவற்றைக் காட்டியவற்றின் பேர்களைச் சொல்லும்படி வருவித்தும், வேர் மண்ணுக்கு ளிருப்ப தென்பதையும் கொம்பு, இலைகள் வெளியே இருப்பனவென்பதையும், செடிகளின் அடியில் உள்ள ஈரத்தால் வேர்கள் நமக்குக் கைகளைப் போல செடிகட்கு உணவு பொருளை இலை, கொம்புகட்குக் கொடுக்கும் என்பதையும் விளங்கச் செய்தல். இனிய சுவையுள்ள கனிகளையும் காய்களையும், மணமுள்ள மலர்களையும் உண்டாக்குவன இச்செடி மர முதலியவைகளே. இவ்வகையான நல்ல பொருள்களுண்டாகும்படி செடிகளையுண்டாக்கி நம்மையும்படைத்து இன்பம் நுகரச் செய்பவர் யார் எனக் கேட்டுக் கடவுள் என்னும் விடையால் நமக்கு எல்லா வகைகளிலும் நன்மையை விளைக்கும் கடவுள் எங்கும் நிறைந்து எல்லா நன்மைகளையுந் தந்து காக்கிறார் என்பதை விளங்க வைத்தலும் அத்தகைய கடவுளை நாம் உள்ளம் உடம்பு வாய்களால் உன்னிப் பணிந்துபோற்றி வாழ்வாம் எனக் கூறி முடித்தலாம்.

உடல் நூலறிவு தூய்மை.

செடி மர இன அறிவு.

கடவுள் அறிவு.

சோமு. க. சச்சிதாநந்த முதலியார்.

பெண்கள் பக்கம்

சீதை

(கூ௫-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலைத்தாண்டும் ஆற்றலுடைய அநுமானிடம் அறிகுறியாக இராமர் தன் விரலணியைக் கொடுத்துச் சீதையைக் கண்டு வரும்படி யேவ அநுமான் அங்கிருந்த மகேந்திர மலைமீதேறிப் பாய்ந்து இலங்கையைச் சேரப் பெற்றார். வழியில் எதிர்த்த சிம்மகி யரக்கியையும், இலங்கையில் பகைத்த இராவணனது தங்கையாகிய சிரௌஞ்சையையுங் கொன்று இலங்கணி யென்பாளை மொத்தித்தள்ளிப் பின் சீதையைத் தேடித் திரிந்தான். முடிவில் அசோகவனம் என்னும் சோலையைச் சேர்ந்து பல அவுண மாதர்களால் சூழப் பெற்று இடையே மாசற்ற மணியேபோல் முடி சோர்ந்து அடி நோக்கி உளங்கன்றி யுட்கார்ந்திருநத சீதையைக்கண்டு அநுமான் அவள் வீற்றிருந்த விடத்தி னணித்தாய மணிபுஙக மரத்திலேறி வேளையை யெதிர் பார்த்திருந்தான் அநுமன். அவ்வேளை இராவணன் பலமடந்தையர் சூழச் சீதைபாலேகி யவளிடந் தனது பெருமைகளை விரித்துரைத்துத் தன்னை மணப்பாளாயின் தன்னைச் சூழ்ந்துள்ள அத்துணை மடந்தையரும் அவர்களது தலைவியும் அரசியுமாகிய தன் மனையாட்டி மண்டோதரி யென்னும் மயன் மகளும் அவளுக்குப் பணிவிடை புரியும் உயர் நிலையில் அவளை யிருத்துவதாக எடுத்துரைத்தான். சீதை யவனை யிகழ்ந்து அவனுடைய தீய செயலுக்குத் தன் றலைவனும் இராமனால் தக்கவாறு தடியப்பெறுவா னென்றனள். நிறைகாககும் மடந்தையர் நீணிலத்தில் என்றும் பொன்றா ஏற்றமுறும் புகழுடமபு நிலவ மேனிலை யுற்று பெருவாழ்வு பற்றி முடிவிலா வின்பத்திற் றிளைத்து நிற்பதும் ஆடவர் பிறனில் விழைந்து பீடற்றுப் பீழையுற்று எவராலும் வெறுக்கப்பட்டழியா நெறியாகிய கொண்ட பெண்டிடமே காதலைச் செலுத்தி குன்றேபோல் காட்சிக் கெளியரா யுள்ளத்திட்பமுற்று எவராலும் விரும்பப்பெற்று புகழுறுவர் என்றமைதியுற்றாள். இலங்கைவேந்தன் ஆண்டுக்குழுமியிருந்தகாவலரக்கியரிடத்தில் சீதையைத் தன்னிடம் காதல் கொள்ளுமாறு ஏற்ற முறையைக் கைகொள்ளும்படிக் கூறிச் சென்றான். அவன் நீங்கிய வப்போதே அரக்கியர் சீதையை இன்சொற்களாலும் வன்சொற்களாலும் பல படக் கூறத் தொடஙகினர். அவ்வமயம் இராவணனது தம்பியான விபீடணன்பெற்ற புதல்வியாகிய திரிசடை யென்பாளும் சீதையைக் காக்கும் மாதர்களில் ஒருத்தியாயிருந்ததால் அவள் மற்றைய மடந்தையரை யடக்கிச் சீதைக்குத் தீயவை யொன்றும் மொழியாலும் செயலாலுமியற்றா திருக்குமாறு நல்லுரை கூறினாள். அவள் சொற்படி மற்றோரும் அடங்கி யிருந்தனா. அநுமார் சீதையைக் கண்டு தான் கொணர்ந்த கணையாழியைச் சீதைக்குக் காட்டி இனி இராமர் படைகளோடு இலங்கை சேர்ந்து இராவணனைத் தடிந்து தன்னைக் கூட்டிச் செல்ல விருப்பதாகக் கூறி சீதை தந்த சூடாமணியைக்கைபற்றி யவளைப் பணிந்து அச்சோலையை யழிக்க அறிந்த தானவர் எதிர்க்க அருள் அட்சன் எனனும் இராவணன் மகனொருவன்மடிந்தனன். அறிந்த தானவர் அநுமானைக் கட்டிக்கொண்டு இராவணனிடஞ்சேர்ப்பிகக அநுமானை யாரென்று வினவி யிராமனது ஒற்றனென வறிந்து அவனது நீண்ட தோர்வாலில் கந்தைகளைச்சுற்றிப் பந்தமாக நெய்யிட்டுக் கொளுத்தித் துரத்த அநுமான் விரைந்து இலங்கை நகர முழுவதும் எரி கடவுளுககு இரை யூட்டிக் கடலிற் குளித்து அதனைக் கடந்து இராமர் பக்கல் சார்ந்து சென்றறிந்தவற்றைச் செவ்விதாய்க் கிளத்தினன்.

சீதை தந்த சூடாமணியை யிராமரிடஞ் சேர்த்தனன். இராம இலட்சுமணர் இறும்பூதெய்தினர்.

சுக்ரீவன் தன் படைகளினால் குன்றுகளையும், பாறைக் கற்களையுமிட்டுக் கடலில் அணையிட்டு வழியாக்கினன். அவ்வழியாக இராமன் இலட்சுமணன் குரங்கு படைகள் நடந்துசென்று இலங்கை சேர்ந்தனர். குரங்குகள் பட்டணமுழுதும் பரவி கேடு புரியத் தொடங்க அறிந்த இராவணன் தன் தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரசித்து, விபீடணன் முதலானோருடன் அவுணப் படை வெள்ளங்கொண்டு போர்முனை குறுகினன். விபீடணன் இராமன் முதலியோரைப் பகைக்காமல் ஒற்றுமை கொள்ளவும் சீதையை யிராமனிடஞ் சேர்ப்பிக்கவும் கூடிய நல்லுரை வழங்கியும் வெறுத்த தன் தமையனை விட்டுப் பிரிந்து இராமரை அடைக்கலம் புகுந்திட அவரது சார்பு கிடைத்தது. இருபுறத்தோரும் போரிடத் தொடங்கினர். இப்படிச் சின்னாள் போர் நடைபெற்று வருகையில் ஓர்நாள் இராவணன் தான் போர்க்கோலத்தோடு சீதையிடஞ் சென்று சீதையை முன்போல் வேண்டினன். அச்சுறுத்தினன். எதையும் பொருட்படுத்தாமல் அலைவுறு விளக்குபோலிருந்தாள் சீதை. இராவணன்பின் தன்னாலாவது இனியொன்றுமில்லையெனத் தெரிந்து போர்முனை யுற்றுப் போர்க்களத்தில் இராமனது கூரிய கணைகளால் தன்கிளைமடிந்து தனிமரம்போன்ற தானும் விழுந்து மடிந்தான். இராமன் தன் அன்புறு சீதையைக் கண்டனன். இராமன்வெற்றிகொண்டு தன்னை மீட்கவந்த காட்சியின் அடங்கா மகிழ்வால் அவனது அடிமிசை வீழ்ந்து அசைவற்றாள் சீதை. ஆருயிரனையாளை ஆர்வத்தோடெடுத்து அணைத்துத் தேற்றினன். ஆர்வலனது அடித்துணை மறா அல்லியங்கோதை நல்லாள் சீதை பிரியாதுய்ந்தாள். உடனே இறந்தவர்க்கு ஈமக்கடன்களை விபீடணால முடிப்புவித்து அவனுக்கு இலங்கையை யாளும்படி முடிசூட்டித் தன் தானைகளும் சார்ந்தோரும் சூழத் தன் நாடு சேர வழி நடந்தானிராமன்.

பரதன் பதினான்கு ஆண்டுகள் கழிந்தவுடன் வருகிறேனென்று கூறிய தன் அண்ணனும் இராமன் ஈரேழாண்டுகள் கடந்தும் வரக் காணாததால் ஆறாதகலக்

கங்கொண்டு அனல் மூட்டி யதிலிறங்கி யுயிரைப் போக்கிக் கொள்ளத் துணிய அக்கால் அநுமான் தோன்றி யுறுதி கூறித் தேற்றினுன். பின்னர் இராமர் இலட்சுமணன் சுக்ரீவன் முதலியோரு டன் அயோத்தியைச் சேர்வுற்று நல்ல நாளில் நல்ல வேளையில் ஆங்கிருந்த ஆசான், அமைச்சர் மற்றும் பல பெரி யோர், நோன்பாளர் முனிவர், துற வோர் அறவோர், நிறைகாக்கும் நெறி மாதர், பெற்றோர்ப்பேணும் பெருமக்க ள்முதலிய நல்லோர் நனமொழி கூறிப் பாட வெற்றி மொழிகள் விளம்பப்பெற பல்லியங்கள் முழங்க பட்டணமெங்கும் அணியுற் றிலங்க நல்லுரை நன்மணி யெங்கும்வழங்க எவரும் மகிழ ஆதுலர் கூத்தாட சீதாபிராட்டியோடு ஏறணை யேறி யமர்ந்து அணிமுடி சூடப் பெற் ருன். ஆண்டார் அயோத்தியை நீண்ட தோர் பந்நூருண்டுகள் சாறும். புதல்வ னும் இலவனையும் அவனைச் சேர்ந்த குச னையும் மக்களாய்ப் பெற்ருர். வேள்வி, நோன்பு, கொடைகளால் மூவர் கடன் களை முடித்து வந்தார். அவரது அர சாட்சியின் மேன்மையை கேள்வி மர பாக "இராம ராஜ்ஜியமோ" வென்று வழங்கும் பழமொழி விளக்கும். வாழ்க வாழ்க வாழ்கவே.

செங்கோ னெறிகள் எங்குஞ் செழிக்க
மங்கு மறவோர் வளமற் றெழிக
வானம் பொழிக வசையே தவிர்க
ஊனமி னல்லோர் ஓங்கி மல்குக

பணமின்மையால் மண மில்லாதோர், உறைவிட மில்லாதோர், கழகம், மரு ந்து, காவல், செப்பம், திருத்தம் முதலி யன விரும்பும் குடிமக்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் வேண்டுவன யாவும் வாய்க்கப் பெற்றுக் களிகடலில் மூழ்கினர். கனிமொழி வேளையில் இரா மன் தன் தம்பியர் தன்னைச்சூழ்ந்து விரு துகளேந்த பாவையர் வெண் கவரி வீச வேசையர் ஆடிப்பாட மந்திகள் குந்தி

சீதை யிராமர் சேவடி மன்னுக
தீதோ ரறிந்து திருந்துக நாளுமே.

முற்றும்.

குறிப்பு:—கலா சிந்தாமணியின் ஆரும் ஆண்டு முதற் பகுதியில் ௩௰ ஆம் பக்கத்து ௨ ஆம் பத்தியின் ௫ ஆம் வரியில் "மீண்டும் கைகேசிக்கே யீந்தனர் அரசர்" என்பதை "மீண்டும் சுமித்திரைக்கே யீந்தனர் அரசர்" எனத் திருத்திப் படித்துக் கொள்க.

ஞானாம்பிகை.